www.tamilarangam.net



# தோழர் பி.தாஸ்

## பாட்டாளிகளின் படைத் தலைவர்

தொழிலாளர் ஒற்றுமை பதிப்பகம்
Lok Awaz Publishers and Distributors

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தோழர் பி. தாஸ்

## பாட்டாளிகளின் படைத் தலைவர்

தொழிலாளர் ஒற்றுமை பதிப்பகம்

Lok Awaz Publishers and Distributors

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற் பதிப்பு அக்டோபர், 1999

விலை ரூ. 20/-

நூல் கிடைக்கும் முகவரி: தொழிலாளர் ஒற்றுமை பதிப்பகம்
தோழர்: E.சரவணன்
21/A3/1, வள்ளுவர் நகர், 1வது தெரு (கிழக்கு)
கோவில்பட்டி-628501
தூத்துக்குடி மாவட்டம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SEELAN BOOKS NORWAY
SIGNATURE



# தோழர் பி. தாஸ்

(18.11.1927 - 6.11.1996)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பதிப்புரை

ஒரு புதிய சமுதாயத்தை அமைப்பதற்காக உறுதியும், துணிவும் கொண்ட போராட்டங்கள் பலவற்றை நடத்திய தோழர் பி. தாஸ், தாம் வாழ்ந்த வாழ்க்கையில் சுமார் 10 வருடங்களை சிறைகளிலும், இரண்டு வருடங்களை தலைமறைவிலும் கழித்தார்.

அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டு அஞ்சி ஒதுங்கியவர்களை-யெல்லாம், அரசை எதிர்த்து உரிமைக்குரல் முழக்குவோர்களாகவும், போராளிகளாகவும் மாற்றும் திறமையும், பேச்சாற்றலும் கொண்ட அவர், உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக, தமிழகத்தின் பல பாகங்களிலும் பம்பரம் போலச் சுழன்று, அதிகாரவர்க்கத்தின் அடக்கு முறை போன்றவற்றுக்கெதிராக உழைக்கும் மக்களை அணி திரட்டினார்.

இயக்கப்பணிகளுக்காக ஊர் ஊராகச் சென்று உழைப்பாளி மக்களைச் சந்தித்து விவாதங்கள் நடத்துவதில் வல்லமைபடைத்தவர். உழைப்பாளி மக்கள் மத்தியில் புரட்சிகர அமைப்பை உருவாக்கிட வழிவகுப்பதிலும் திறமை படைத்தவர். அரசின் அடக்குமுறையை முறியடிக்கத்தக்க ரீதியில், மக்கள் சக்தியை உருவாக்குவதிலும், போராடும் மக்களை பிளவுபடுத்தும், பிரித்தாளும் பிற்போக்குத்தனங்களை முறியடிப்பதிலும் வல்லமை படைத்தவராகவுமிருந்தார்.

தோழர் பி.தாஸ் ஒரு பேச்சாளர், அமைப்பாளர் என்பது மட்டுமின்றி, கம்யூனிச சித்தாந்தத்தைக் கற்று, லெனினிசத்தின் அடிப்படை அம்சங்கள் என்ற ஜே.வி. ஸ்டாலின் எழுதிய நூலில் உள்ள விசயங்கள், மற்றும் போல்ஷேவிக் கட்சியின் வரலாறு (History of C.P.S.U.(B) போன்ற நூல்களைக் கற்றுத் தேர்ந்த, கட்சி அமைப்பாளராகவும், இளம் தோழர்களுக்கு வழிகாட்டித் தோழராகவும், நல்லாசிரியராகவும் திகழ்ந்தார்.

தனது சிறை வாழ்க்கையிலும், சிறையிலிருந்த சக தோழர்களோடு விவாதித்து, தனது அரசியலை உழைக்கும் மக்களுக்காக உறுதிப்படுத்திக் கொண்டார்.

6.11.1996-ம் நாள் வயது முதிர்ச்சியின் காரணமாக நெஞ்சு வலி ஏற்பட்டு இயற்கை எய்தினார். இயற்கையின் இரக்கமற்ற விதி, உழைக்கும் மக்களிடமிருந்து அவரைப் பிரித்துவிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உயிரோடும் கலந்து நின்ற தோழர் பி.தாஸ் அவர்களைப் பற்றி, அறிந்து கொள்வதற்கு மட்டுமில்லாமல், அவரது கம்யூனிசப் பற்று, சமரசமற்ற வர்க்கப் போராட்டம், நவீன திருத்தல்வாதம், சந்தர்ப்ப வாதம், அதிதீவிரவாதம், வறட்டு வாதம் போன்றவற்றுக் கெதிராக அவரது பங்களிப்பு மகத்தானதாகும் என்பதை அறிந்துகொள்ள இந்நூல் பேருதவியாய் அமைந்துள்ளது.

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் தொடர்கின்ற சாதிக் கலவரம், மற்றும் வன்முறைச் சம்பவங்கள், குற்றவியல் மயமாகும் அரசியல் நடவடிக்கை-களுக்கெதிராக நடைபெறும் உழைக்கும் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டங்களுக்கு இந்நூல் அடிஉரமாக அமையும் என்பது உறுதி.

இந்நூலை சிறப்பாகவும், எளிமையாகவும், தயார் செய்ய உதவிய தோழர்கள் அனைவரும் பாராட்டுதலுக்குரியவர்கள். தொழிலாளர் வர்க்க உணர்வுடன் இந்நினைவு நூலை வெளியிட முடிவு செய்து, நூல் வெளியீட்டுப் பணிகளை செம்மையாக முடித்து நிறைவு செய்த தோழர்கள் அனைவருக்கும் மீண்டும் இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சியின் சார்பாக புரட்சிகர வாழ்த்துக்களை தோழமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

ஆசிரியர் குழுவின் சார்பாக

தோழர் டி. வில்சன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அணிந்துரை

தியாகத்தில் வென்றெடுத்த கம்யூனிச இயக்க வரலாற்றை இளைய தலைமுறையினரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு தோழர் தாஸ் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை புத்தக வடிவத்தில் வெளியிடும் இம்முயற்சி மிகவும் வரவேற்கத்தக்கது. தோழர் தாஸ் முப்பதாண்டுகளுக்கு மேலாக கம்யூனிச இயக்கத்திலும் தொழிற்சங்க இயக்கத்திலும் பணியாற்றியவர். சிறை தண்டனைகளையும், சித்திரவதைகளையும் அஞ்சாநெஞ்சுடன் தாங்கிக் கொண்டு, கம்யூனிச பதாகயை உயர்த்திப் பிடித்தவர்.

நக்சல்பாரி இயக்கத்தின் மீது நடத்தப்பட்ட அரசு அடக்குமுறையினாலும், உள்கட்சி அமைப்புகளின் பலவீனங்களாலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ.) சின்னாபின்னமாக்கப்பட்ட பிறகு, "கட்சிக்குள் இரு வழி போராட்டம்" என்றும் "மூன்று உலக கோட்பாடு" என்றும் மார்க்சிச–லெனினிசத்திற்கு விரோதமான கொள்கைகளின் வீச்சால் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஒரு பெரும் குழப்பம் நிலவி வந்தபோது, வெளிநாடுகளில் வசிக்கும் இந்திய முற்போக்கு பகுதியினரிடையே செயல்பட்டு வந்த இந்துஸ்தானி கெதர் கட்சி (அந்நிய நாடுகளில் இந்திய மார்க்சிஸ்ட்–லெனினிஸ்டுகளின் அமைப்பு)–Hindustani Ghadar Party (Organisation of Indian Marxist-Leninists Abroad) இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஒற்றுமையை மீண்டும் ஏற்படுத்துவதில் தனது பங்கை நிறைவேற்ற 1977–ல் இந்தியாவில் செயல்பட முடிவெடுத்தது. இந்தியாவில் செயல்பட்டுவந்த கம்யூனிஸ்டுகளுடனும், பல்வேறு கம்யூனிஸ்ட் குழுக்களுடனும், கட்சிகளுடனும் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள பலவீனங்களை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை கலந்தாலோசித்து, எல்லோருடைய கூட்டு முயற்சியுடன் இந்த மாபெரும் பணியை சாதிக்க HGP (OIMLA) நடவடிக்கைகளைத் தொடங்கியது. இத்தருணத்தில் தான் கனடாவிலிருந்து வெளியிடப்பட்ட பீப்பள்ஸ் கனடா டெய்லி நியூஸ் (Peoples' Canada Daily News-PCDN) மூலமாக தோழர் தாஸ் அவர்களுடன் HGP தோழர்களுக்கு தொடர்பு ஏற்பட்டது. அந்த கட்டத்திலிருந்து தோழர் தாஸும் அவருடைய சக தோழர்களும் இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சியை ஸ்தாபித்து கட்டியமைக்கும் பணியில் முழு மூச்சுடன் இறங்கினார்கள், அதில் வெற்றியும் பெற்றார்கள்.

பாட்டாளிகளின் கொடிப்படையாக செயல்பட்டு, பல நாடுகளில் தொழிலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற, அவர்களுக்கு வழிகாட்டியாகவும் தலைவனாகவும் கம்யூனிஸ்ட் கட்சிகள் செயல்பட்டது, இருபதாம் நூற்றாண்டின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிகப்பெரும் சாதனைகளில் ஒன்றாகும். இப்படிப்பட்ட ஒரு கட்சியில், உள்கட்சி வாழ்க்கையையும் கட்சியின் அமைப்பு விதிமுறைகளையும் கட்டிக்காக்கவும் உறுதிபடுத்தவும் தனது இறுதி மூச்சு வரை தோழர் தாஸ் பாடுபட்டார். புதிய ஆயிரமாண்டுக் காலத்தின் தொடக்கத்தில் மாபெரும் பணிகள் கம்யூனிஸ்டுகளை எதிர்நோக்கியுள்ள தருணத்தில், இந்த வாழ்க்கை வரலாறு பெரும் உத்வேகத்தை அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இவண்,
இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சி
மத்திய குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொருளடக்கம்


பதிப்புரை

முன்னுரை

அணிந்துரை

1. வாழ்க்கை வரலாறு 1

2. கடிதங்கள்

மார்க்சிச-லெனினச வீரர் தோழர் தாஸ் 27

புரட்சியாளர் தாஸ் 29

சமூகத் தொண்டுக்கு முதலிடம் 34

சபதம் எடுப்போம் 36

ஒரு தாஸ் போனால் ஒன்பது தாஸ்கள் பிறப்பார்கள் 39

தன்னலமற்ற தோழர் 41

சோதனைகளை வெற்றி கொண்டவர் 42

புரட்சிகர ஐக்கிய முன்னணிக்கு வழிகாட்டி 46

சிறந்த கம்யூனிஸ்ட் அமைப்பாளர் 46

மார்க்சியவாதிகளின் இழப்பு 48




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


| | |
|---|---|
| பாக்கியம் கிடைக்கவில்லை | 48 |
| புறமுதுகு காணாத போர் மறவர் | 49 |
| சிருஷ்டியின் நஷ்டம் | 50 |
| நெஞ்சுள்ளவரை நினைவிருக்கும் | 51 |
| போராட்டக்கனல் மூட்ட சபதமேற்போம் | 52 |
| மார்க்சிச ஆய்வை மேற்கொள்வதே நமது குறிக்கோள் | 53 |

www.tamilarangam.net

# வாழ்க்கை வரலாறு

## தோழர் பி.தாஸ் அவர்களின் பிறப்பு

தோழர் தாஸ் அவர்கள் 1929–ம் வருடம், நவம்பர் மாதம் 18–ஆம் நாள், கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா, அருமனை என்ற கிராமத்திற்கு அருகில் உள்ள புதுவல்தேசம் என்ற சிற்றூரில் பிறந்தார். இவரது தந்தை பெயர் பொன்னுமணி, தாயார் பெயர் செண்பகம் என்பதாகும். தோழர் தாஸின் தந்தை பனையேறும் தொழில் செய்தும், விவசாயக்கூலி வேலைகள் செய்தும் குடும்பத்தை நடத்தி வந்தார். தோழர் தாஸ் அவர்கள் 4–ம் வகுப்பு வரை தான் கற்றார். தோழர் தாஸ் அவருக்கு 15 வயது நிறைவடையுமுன்பே தந்தையும், தாயும் காலமாகிவிட்டனர். அவர்கள் நான்கு மக்களைப் பெற்றெடுத்ததில் தோழர் தாஸ் அவர்கள் இரண்டாவது மகனாகப் பிறந்தார். பெற்றோர் மறைந்த பின்னர் பெரியப்பா (தகப்பனாரின் அண்ணன்) அப்பாவு என்பவரால் அருமனை இரும்பிலி தேசம் வீட்டில் இவர்கள் நால்வரும் வளர்க்கப்பட்டனர். தோழர் தாஸுக்கும், அவரது உடன் பிறந்தவர்களுக்கும் வயது இருபது நிறைவடையுமுன்பே வேலைக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இவர்களை ஏற்று, வளர்த்துப் பராமரிக்கும் பொறுப்பில் ஏற்பட்ட கடன் தொல்லை காரணமாகவும், பெற்றோர்கள் நோய்த்தாக்குதலுக்குள்ளான போது ஏற்பட்ட கடன்கள் காரணமாகவும், பெற்றோர்களுக்குரிய குடியிருப்புவீடும், காலி மனையும் விற்கப்பட்டு விட்ட நிலையில் இவர்கள் குடியிருக்க வீடு இல்லாத நிலைமையும், பெரியப்பா வீட்டிலிருந்து வெளியேறும் நிலைமையும் ஏற்பட்டது.

இப்படிப்பட்ட நிலைமையில், தோழர் தாஸும், மூத்த சகோதரி கொச்சம்மாள், இளையவர்கள் ரோசம்மாள் (தங்கை) பாலையன் (தம்பி) ஆகிய நால்வரும் கன்னியாகுமரி மாவட்டம், ஆலஞ்சோலைக்கருகிலுள்ள சக்கரபாணி ரப்பர் எஸ்டேட்டில் ரப்பர் பால் வெட்டுதல் (TAPPING) மற்றும் காட்டு வேலைகள் பலவற்றைச் செய்கின்ற தோட்டத் தொழிலாளர்களாக வேலைக்குச் சேர்ந்து, தொழிலாளர்களுககுரிய காலணி வீட்டிலேயே குடியேறி வசித்து வந்தனர்.

சக்கரபாணி எஸ்டேட்டில் தோட்டத் தொழிலாளியாக வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போதே உழைக்கும் மக்களின் நலன்களுக்காக பல்வேறு விதத்தில் சேவைகள் செய்து பொது நலப்பணிகளில் ஈடுபடத் தொடங்கினார் தோழர் தாஸ்.

இக்காலகட்டத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருவனந்தபுரம் மாவட்டக் கமிட்டி, தோழர் லூயி தேவசகாயம் என்ற தோழரையும், வேறுசில

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோழர்களையும் கன்னியாகுமரி மாவட்ட தோட்டப்பகுதிகளுக்கு அனுப்பி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை இப்பகுதியில் அமைக்கவும், தோட்டத் தொழிலாளர் சங்கத்தை உருவாக்கவும் தீர்மானித்து, இதன் அடிப்படையில் தோழர்கள் லூயி தேவசகாயம் உட்பட பல்வேறு தோழர்கள், கன்னியாகுமரி மாவட்ட தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாகவுள்ள விளவங்கோடு தாலுகாவிலுள்ள பல பகுதிகளுக்கும் சென்று செங்கொடி இயக்கத்தை உருவாக்கும் தீவிர முயற்சியில் ஈடுபட்டனர்.

இப்படிப்பட்ட முயற்சியில் தோழர்கள் ஈடுபட்டபோதுதான் தோழர் தாஸுக்கும், தோழர் லூயி தேவசகாயத்திற்கும் தொடர்பு ஏற்பட்டது. தோழர் லூயி தேவசகாயம் தோழர் தாஸின் எளிமை, நேர்மை, போர்க்குணம் ஆகியவற்றைக் கண்டு வியப்படைந்ததுடன், தோழர் தாஸை வீரம் செறிந்த போராளியாக உருவாக்க முடியும் என்று முடிவு செய்து பலரிடம் தோழர் தாஸின் செயல் முறைகளைப் பற்றி விவாதித்ததாகவும் பல தொழிலாளர்கள் இன்றும் நம்மிடம் கூறுகின்றனர்.

தோழர் தாஸ், தோழர் லூயி தேவசகாயத்தின் அரசியல் விளக்கக் கூட்டங்கள், தொழிற்சங்கப்பயிற்சி வகுப்புகள், மார்க்சிய–லெனினிய நூல்களைப் படித்து, விவாதிக்கும் கட்சிக் கல்வி அரங்கங்கள் போன்றவற்றில் கலந்து கொண்டதுடன், தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை அச்சமின்றி உரிமையுடன் கேட்டு தோழமையுடன் விவாதம் நடத்தி தெளிவு பெற்றார். தான் கற்ற மார்க்சிய–லெனினிய நூல்கள், அரசியல் கட்சிகளின் வெளியீடுகள் தொழிலாளர் சங்க இதழ்கள் போன்றவற்றை கட்சி, சங்கவித்தியாசமின்றி படித்து சகத் தொழிலாளர்களுக்கு குறிப்பான விசயங்களை எடுத்துரைப்பார். இதனாலேயே குமரி மாவட்டத்தின் தோட்டத் தொழிலாளர்கள் இவரை ஆசான் என்றழைத்தனர். தொழிலாளர் பிரச்சினைகள் பற்றிய போராட்டங்களில் அவர் ஆரம்பகாலத்திலிருந்தே தொழிலாளர்களை கலந்து கொள்ளச் செய்து, அவர்களுடைய சம்மதத்தின் அடிப்படையில்தான் போராட்டத்தை முன்னே கொண்டு சென்றார்.

தொழிலாளர்களை பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்தாமல் தலைவர்களாக சில பேர் சென்று நிர்வாகத்திடம் பேசி முடிவுகள் மேற்கொள்வதை தோழர் தாஸ் கடுமையாக எதிர்த்து வந்தார்.

## திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் அடக்குமுறை

1956–ம் வருடம் வரை கன்னியாகுமரி மாவட்டம், திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக கேரளத்துடன் இணைந்திருந்தது. இக்காலத்தில் பிரிட்டிஷ் அரசின் உதவியுடன் தொழிலாளர்களின் பல்வேறு உரிமைப் போரரட்டங்களை காவல் துறை அடக்கி ஒடுக்கியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிலாளர்கள் மீது காட்டு மிராண்டித்தனமான துப்பாக்கிச் சூட்டை நடத்தி போராளிகளைப் பிணமாக்கியது. இக்கொடிய அடக்குமுறைகளை எதிர்த்து, தொழிலாளர்களின் உரிமைகளுக்காக, பல்வேறு விதமான போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. இரப்பர் தோட்டத்து முதலாளிகளுள் பலர் கேரளாவைச் சேர்ந்த பெரும் நிலப்பிரபுக்கள். இவர்களும், எஸ்டேட் நிர்வாக அதிகாரிகளும் தொழிலாளர்களுக்கு இழைத்த கொடுமைகள் பலவற்றைக் கண்டு தோழர் தாஸ், குமுறினார். தொழிலாளர்கள் அடிமைகளாய், விழிப்புணர்வின்றி, கை கட்டி நிற்பதைப் பற்றிச் சிந்தித்தார். தொழிற்சங்கத்தில் உறுப்பினராக மட்டும் இருந்து, ஒரு சிறு வட்டத்திற்குள் தனது செயல்களை நிறுத்திக் கொள்ள அவர் விரும்பவில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலும் சேர்ந்து, மக்களுக்கும், கட்சிக்கும் சேவை செய்யவிரும்பினார்.

## தோழர் தாஸும் சி.பி.ஐ. கட்சியும்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சிப் பிளவுபடுவதற்கு முன்பும், 1952 பொது தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பங்கெடுப்பதற்கு முன்புள்ள காலங்களில் அக்கட்சியில் தொழிலாளர்கள் உட்பட அறிவு ஜீவிகள் வரை யாரும் எளிதில் உறுப்பினராக ஆகிவிட முடியாது. 5 வருட காலம், கட்சியின் உள்ளூர் கமிட்டியின் முடிவுகளுக்கேற்ப, கட்சிப்பணிகளில் ஈடுபட்டிருக்க வேண்டும். பின்னர் ஒரு வருட காலம் பரீட்சார்த்த உறுப்பினராகயிருந்து கட்சிப்பணிகளில் பங்கெடுக்க வேண்டும். 7-ம் வருடத்தில் தான் கட்சியின் முழுமையான தகுதிகளைப் பெற்ற உறுப்பினராக முடியும். மாநிலச் செயலாளர் கையொப்பமிட்ட உறுப்பினர் அட்டையும் கிடைக்கும்.

இப்படிப்பட்ட கடுமையான கட்டுப்பாடுகளை அக்காலத்தில் ஏற்று, 6 வருட காலம் பரீட்சார்த்த உறுப்பினர்களாகயிருந்து 7-ம் வருடத்தில் கட்சி உறுப்பினர் அட்டை பெற்ற கம்யூனிஸ்ட் ஊழியர்கள் பலரில் தோழர் தாஸும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தோழர் தாஸ், கன்னியாகுமரி மாவட்டக் கமிட்டிக்குட்பட்ட, அருமனை ஏரியாக் கமிட்டியில் உறுப்பினராகப் பங்கெடுத்து, அப்பகுதிவாழ் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டங்களில் ஆர்வத்துடன் பங்குபெற்று உழைக்கும் மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றார்.

## தோழர் தாஸின் திருமணம்

1958-ம் வருடத்திய காலங்களில் அருமனை கிராமத்தின் ஊராட்சி மன்றத்தலைவராகயிருந்தவர் பொன்னுப்பிள்ளை என்பவர். பொன்னுப் பிள்ளைக்கும், தோழர் தாஸுக்கும் சிறிய அளவிலான ஒரு அறிமுகமான பழக்கமே உண்டு என்றாலும், தோழர் தாஸ் அவர்களுடைய கட்டுப்பாடு, நேர்மையை இவர் உன்னிப்பாகக் கவனித்து வந்திருக்கிறார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதும், தோழர் தாஸின் திருமணத்திற்குப் பின்னர்தான் வெளிப்படையாகியுள்ளது.

அருமனை ஊராட்சி எல்லைக்குட்பட்ட சூட்டூர்கோணம், குன்னூவிளை வீடு என்ற பகுதியில் சாமிநாதன், பொன்னு என்ற ஏழைத்தம்பதியினர் விவசாயக் கூலி வேலைகள் செய்து கொண்டு வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கு ஒரு ஆண் மகனும், நான்கு பெண் மக்களும் இருந்தனர். இக்குழந்தைகள் சிறுவர்களாகயிருக்கும்போதே, சாமிநாதன், பொன்னு தம்பதியினர் ஒருவர் பின் ஒருவராக நோய்த்தாக்குதலினால் காலமாகிவிட்டனர். இக்குழந்தைகளுக்குப் பாதுகாப்புத் தர உறவினர்கள் யாருமே முன்வராத நிலைமையில் அக்கம்பக்கத்திலுள்ள அனுபவமும், கருணை உள்ளமும் கொண்ட சில பெரிய மனிதர்களின் பாதுகாப்பில் இக்குழந்தைகள் தாங்களாகவே ஆளுக்கொரு வேலைகளைச் செய்து ஜீவித்து வந்தனர். இவர்களுக்கு ஊராட்சி மன்றத்தலைவர் பொன்னுப்பிள்ளையும் ஆதரவளித்து பாதுகாத்தும் வந்தார்.

இப்படிப்பட்ட வேதனையும், சோதனையும் ஏற்பட்டு ஆதரவற்ற நிலைமையிலிருக்கின்ற இக்குழந்தைகளுக்கு ஒரு பாதுகாப்பை ஏற்படுத்த ஊராட்சி



*தோழர் பி. தாஸும், துணைவியார் தோழர் லைசம்மாளும் குடியிருப்பு வீட்டில்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மன்றத்தலைவர் திரு. பொன்னுபிள்ளை அவர்கள் முடிவு செய்தார். இவர் ஏழை, எளிய மக்களிடம் அன்புடன் பழகுவார் என்றும், கருணை உள்ளம் கொண்டவர் என்றும், இவருக்கு யாரிடமும் எந்த விரோதமும் இல்லை என்றும் நற்பெயர் பெற்றவராகயிருந்ததால் ஊர்மக்கள் அனைவரும் இவரது முடிவுக்குட்பட்டு முடிவை நிறைவேற்றியும் வந்தனர். இதனடிப்படையில், தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பில் வசித்துவந்த தோழர் தாஸ் அவர்களை அருமனைக்கு அழைத்து வந்து, மேலே கூறப்பட்டுள்ள சாமிநாதன், பொன்னு தம்பதியினரின் வாரிசுகள் குடியிருக்கும் வீட்டிற்கு பொன்னுப்பிள்ளையும் சென்றார்.

ஊராட்சி மன்றத்தலைவர் திரு. பொன்னுப்பிள்ளை அவர்கள், தோழர் தாஸை, தனது பக்கத்தில் அமரச் செய்து, "இப்போது நான் உன்னிடம் சில விசயங்கள் சொல்வேன், உனக்கு விருப்பம் இருந்தால் ஏற்றுக்கொள், இல்லை என்றால் மறுக்கவும் செய்யலாம்" என்று கூறிவிட்டு, "இந்த வீட்டில் ஐந்து பிள்ளைகள். இவருடைய தாயும் தந்தையும் இறந்துவிட்டனர். உனக்கும் பெற்றோர் இல்லை. இந்த பிள்ளைகளுக்கும், உனக்கும் நான் ஒரு பாதுகாவலன் என்ற ஸ்தானத்தில் சொல்கிறேன். இந்த வீட்டிலுள்ள லைசம்மாள் என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டு நீ இங்கேயே இவர்களுடன் வசிக்க வேண்டும், மற்ற பிள்ளைகளையும் நீ காப்பாற்றி, பொறுப்புடன் இவர்களின் திருமணத்தையும் நீ முன் நின்று நடத்திட வேண்டும். உனக்கு வரதட்சினை எதுவும் கிடையாது. இவர்களுக்கு உழைப்புச் சக்தியைத் தவிர வேறு உடமைகள் ஏதுமில்லை" என்று கூறிவிட்டார்.

இதற்குப்பின்னர் தோழர் தாஸ் அவர்கள் தன்னுடைய மூத்த சகோதரி உட்பட நெருங்கிய உறவினர்களிடமும், சகத் தொழிலாளர்களிடமும், கலந்தலோசித்துவிட்டு, தோழர் லைசம்மாள் அவர்களை வாழ்க்கைத் துணைவியாக ஏற்று இல்லற வாழ்வை தொடர்வதற்கு சம்மதம் தெரிவித்து, திரு. பொன்னுப்பிள்ளை அவர்களுக்கு தகவலும் தெரிவித்துவிட்டார். தோழர் லைசம்மாள் அவர்களின் தாய் மாமாவும் இத்திருமணத்திற்கு சம்மதித்தார். இதற்கு பிறகு 1958-ம் ஆண்டு அருமனைப் பாக்கியபுரத்தில் (ஆர். சி. தேவாலயத்தில்) அனைவருடைய உதவியாலும் எளிமையான முறையில் தோழர் தாஸ் அவர்களின் திருமணம் நடைபெற்றது.

தோழர் தாஸ் உட்பட, அவரது சகோதர, சகோதரியும் லைசம்மாள் அவர்களின் சகோதரன், சகோதரிகளும் பல வருடங்கள் ஒள்றாக வாழ்ந்து, கூட்டுழைப்பு, கூட்டுவருமானம், கூட்டான குடும்பச் செலவு முறைகளினால், தோழர் தாஸ் அவர்கள் தன்னுடைய உடன்பிறப்புக்களுக்கும், தோழர் லைசம்மாள் அவர்களுடைய உடன்பிறப்புக்களுக்கும் எளிய முறையில் தானே முன்னின்று திருமணங்களை நடத்தி, இவர்களின் வாழ்வில் ஒளிவிளக்கை ஏற்றிவைத்து,

www.tamilarangam.net

தலைசிறந்த குடும்பத் தலைவராக செயல்பட்டார் என்று இவர்களுடைய உறவினர்கள் உட்பட பல வயோதிகர்களும் பெருமையுடன் தெரிவிக்கின்றனர்.

தனது திருமணத்திற்கு பின்பு, சக்கரபாணி எஸ்டேட் தொழிலாளர்களின் குடியிருப்பிலிருந்து காலி செய்து விட்டு அருமனைக்குத் திரும்பிய தோழர் தாஸ், மரீனா எஸ்டேட், காந்திமதி எஸ்டேட், மாருதி எஸ்டேட்களில் பால் வெட்டுத் தொழிலாளியாகப் பணியாற்றிக் கொண்டே, பொதுவாழ்விலும் ஈடுபட்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், தோட்டத் தொழிலாளர் சங்கமும் நடத்திய பல போராட்டங்களில் பங்கேற்று சிறைக்குச் சென்றுள்ளார்.

## கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை மீது ஆர்வம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் இரப்பர் தோட்டங்களும், அரசுக்குச் சொந்தமான இரப்பர் தோட்டங்களும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் உள்ளது. இரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை முன்னிலைப் படுத்தி தொழிலாளர் கூட்டங்கள் நடைபெறுவது வழக்கம், அக்கூட்டங்களில் பேசுவோர் பலரும் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையிலுள்ள விசயங்களைச் சுட்டிக் காட்டி உரையாற்றுவார்கள். முடிவுரையில் "உலகத்தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்! நீங்கள் இழப்பதற்கு ஒன்றுமில்லை, வெல்வதற்கு ஒரு புதிய உலகம் உள்ளது" என்று உணர்ச்சியுடன் பேசுவதைக் கேட்டு தோழர் தாஸுக்கு எப்படியாவது தானும் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை படிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. இக்காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை மலையாளம், தமிழில் கிடைக்காமல் இருந்ததை நினைத்து வேதனைப்பட்டு, மார்க்ஸும், ஏங்கெல்ஸும் வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை மலையாளம், தமிழில் எப்போது கிடைக்கும் என்று ஏக்கத்துடன் கட்சியின் மாவட்டப் பொறுப்பாளர்களிடம் விரைவில் வெளியிடவும் வலியுறுத்தியதாகவும், அவரது சகத் தோழர்கள் தெரிவிக்கின்றனர். தோழர் தாஸ் மார்க்ஸ்-ஏங்கெல்ஸ், லெனின்-ஸ்டாலின், ஜார்ஜ் டிமிட்ரோவ், மாசேதுங், போன்ற கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களின் நூல்கள் பலவற்றை தமிழ்/ மலையாளத்தில் கற்றுள்ளார். குறிப்பாக, கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை அவர் தன் வாழ்நாளில் 100 தடவைக்கும் மேலாக, தனக்கு சமயம் கிடைக்கும் போதெல்லாம் படித்துள்ளார் என்று அவருடன் சிறைவாசம் அனுபவித்த தோழர் ஒருவர் நம்மிடம் கூறியுள்ளார்.

## தோழர் தாஸ் விரும்பிப்படித்த முக்கிய நூல்களின் வரிசை

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை, அரசு, அரசும் புரட்சியும், குடும்பம், தனிச் சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், கூலி-விலை, லாபம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்தாபனத்தைப் பற்றி ஸ்டாலின் எழுதியது, லெனினிசத்தின் அடிப்படை அம்சங்கள், ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம், நாட்டுப்புற ஏழைமக்களுக்கு, இயக்கவியல் பொருள் முதல்வாதமும், வரலாற்றியல் பொருள் முதல்வாதமும், போல்ஷேவிக் கட்சியின் வரலாறு, மார்க்ஸ்-ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் வாழ்க்கை வரலாறு, மார்க்ஸ்-ஏங்கெல்ஸ் நினைவுக் குறிப்புக்கள், அல்பேனியத்தொழிலாளர் கட்சியின் தலைவர் தோழர் அன்வர் ஹோஜா எழுதிய ஏகாதிபத்தியமும் புரட்சியும் போன்ற பல்வேறு தத்துவ நூல்களைக் கற்றுள்ளார். மார்க்சிச–லெனினிச விஞ்ஞான அரசியல் தத்துவத்தினைப் புரிந்து கொண்டு, கட்சித்தோழர்களுக்கு தொழிலாளிவர்க்க உணர்வை ஏற்படுத்தினார். பலதோழர்களை போர்க்குணமிக்கவர்களாக, கம்யூனிஸ்ட் போராளிகளாக உருவாக்கிடப் பாடுபட்டிருக்கின்றார். கம்யூனிஸ்ட் கட்சியும், அதனுடைய விஞ்ஞான சித்தாந்தமும்தான் தன்னை ஒரு மதிப்புக்குரிய தொழிலாளியாக வென்றெடுத்து செயல்படவைத்தது என்பதை வெளிப்படையாகவே தெரிவிக்கும் நல்லெண்ணம் கொண்டிருந்தார்.

## இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பிளவு

1964-ல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாகப் பிளவுபட்டபோது, தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் ஒற்றுமை உடைக்கப்பட்டுவிட்டது என்பதை நினைத்து மிகவும் மன வேதனைப்பட்டுத் துடித்தார் தோழர் தாஸ். இப்படிபட்ட மனவேதனைகளுக்கு மத்தியிலும் சகத்தோழர்களிடம் சி.பி.ஐ.(எம்) கட்சிக்கு ஆதவராகப் பேசி, குமரி மாவட்டத்தின் தோட்டப் பகுதிகளில் சி.பி.ஐ.(எம்) கட்சி உருவாக்கப்படுவதற்காக பாடுபட்டும் உள்ளார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பிளவுக்குள்ளான இக்காலகட்டத்தில், கேரளத்தின் முதலமைச்சராகயிருந்த தோழர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்கள், சி.பி.ஐ., சி.பி.எம்., கட்சிகள் எதற்குமே ஆதரவளிக்காமல் அரசியல் நிலவரம் பற்றி ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டு, கம்யூனிஸ்ட் கட்சிகளின் நிகழ்ச்சிகளில் பங்கெடுக்காமல் ஒதுங்கியிருந்தார்.

தோழர் ஈ.எம்.எஸ். அவர்களின் நிலைபாடு குறித்து அறிவதற்கு குமரி மாவட்டத்தின் தோட்டத் தொழிலாளர்கள் ஆவலாய் இருந்தனர். இதனை அறிந்த தோழர்கள் லூயி தேவசகாயம், தாஸ், எஸ்.குழந்தைசாமி, எம்.எம்.அலி போன்றோர் திருவனந்தபுரத்திலிருந்த தோழர் ஈ.எம்.எஸ். அவர்களைச் சந்தித்து அரசியல் நிலவரம் குறித்து நீண்டதொரு விவாதம் நடத்தி தோழர் ஈ.எம்.எஸ். அவர்கள் சி.பி.எம். கட்சிக்கு ஆதரவாக செயல்பட, வேண்டுமென்றும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தோட்டப்பகுதிகளில் தோழர் ஈ.எம்.எஸ். கலந்து பேசகின்ற கிளை கமிட்டி கூட்டங்கள், தொழிலாளர்களின் பேரவைக்கூட்டங்களுக்கு, தாங்கள் முன்னின்று ஏற்பாடு செய்வதாகவும், தோழர் ஈ.எம்.எஸ். அவர்களுக்கு தங்குமிடமும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உணவும், போக்குவரத்துச் செலவும் தொழிலாளர்களிடம் வசூலித்து நிறைவேற்றுவதாகவும் தெரிவித்தனர்.

தோழர் ஈ.எம்.எஸ். இந்த முடிவை ஏற்று கன்னியாகுமரி மாவட்ட தோட்டப்பகுதிகளில் நடைபெறவிருக்கும் அரசியல் பிரச்சாரக் கூட்டங்களிலும், கட்சியின் கமிட்டிக் கூட்டங்களிலும் பங்கெடுக்க வருவதாக ஒப்புக்கொண்டார்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தனியார் தோட்டத் தொழிலாளர்கள், அரசு இரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட சுமை தூக்கும் தொழிலாளர்கள், கட்டிடத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் மத்தியில் தோழர்கள் லூயி தேவசகாயம், எம்.எம். அலி, தோழர் தாஸ் ஆகியோர் முன்னிலையில் தோழர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்களுடையப் பிரச்சாரப் பணி நடைபெற்று சி.பி.எம். கட்சி வேரூன்றி வளருவதற்கு அரும்பாடு-பட்ட பல தோழர்களில் தோழர் தாஸும் ஒருவர் ஆவார்.

சி.பி.ஐ.(எம்) கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மீது எப்படிப்பட்ட குறைகளைக்கூறி தனியாகப் பிரிந்ததோ, அப்படிப்பட்ட அனைத்துக் கறைகளையும் சி.பி.ஐ.(எம்) கட்சியும் தயக்கமின்றி செயல்படுத்தியது. சி.பி.ஐ.(எம்) கட்சியின் பாட்டாளி வர்க்க விரோதப் போக்குகள், சமூக ஜன நாயகக் கட்சியாகச் செயல்படுவது, கம்யூனிஸ்ட் கட்சி என்ற போர்க்குணத்தையும், எஃகு போன்ற உறுதியையும் இழந்து விட்டு, பாராளுமன்ற ஜனநாயகத்தை முன்னேற்றுவது போன்ற, தொழிலாளர்வர்க்க நலன்களுக்கு எதிரிடையான சமரசம் செய்யும்போக்கை, போர்க்குணத்துடன் விமர்சனம் செய்த தோழர்கள்குமரி மாவட்டத்தில் அதிகமானோர் இருந்துள்ளனர். அவர்களுள் தோழர் தாஸும் ஒருவர் என்று கூறினால் அது மிகையாகாது.

இப்படிப்பட்ட விமர்சனங்கள், கன்னியாகுமரிமாவட்டத்தில் மட்டுமின்றி இந்தியா முழுவதும், சி.பி.ஐ.(எம்) கட்சி மீது ஏற்பட்டாலும் கட்சியின் தலைமை இக்குறைகளைப் பற்றி கவலைப்படவில்லை. அது குறித்து விவாதித்து சுய விமர்சனமாக குறைகளை நீக்கிட முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

சி.பி.ஐ.(எம்) கட்சியானது, பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீது முழுமையான நம்பிக்கையை ஏற்படுத்திக்கொண்டு, முதலாளித்துவ அரசுப் பதவிகளில் பொறுப்பேற்று, முதலமைச்சர், உள்ளிட்ட பல்வேறு அரசுப் பதவிகளில் அமர்ந்து உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்குகின்ற உரிமைகளைப் பறிக்கின்ற மக்கள் விரோத சக்தியாக செயல்பட்டது.

www.tamilarangam.net

சி.பி.ஐ.(எம்) கட்சி மக்கள் விரோதச் சக்தியாக செயல்படுவதைக் குறித்து 1968-69ம் வருடங்களில் கடுமையாக உட்கட்சிப் போராட்டங்களும், விமர்சனங்களும் ஏற்பட்டதில், விமர்சித்த தோழர்களின் பெயர் பட்டியல் உள்ளிட்ட அனைத்து விபரங்களடங்கிய பட்டியல் புலனாய்வுத்துறைக்கு சென்றதில், தலைமையின் மீதான சந்தேகம் வலுவடைந்துவிட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் தீவிரவாதிகள் பட்டியலில் தோழர்கள், தாஸ் லூயி தேவசகாயம், கிருஷ்ணப்பிள்ளை, தங்கப்பன், கோபால கிருஷ்ணன், நாராயணன், ராஜசேகரன், குழந்தைசாமி உட்பட இன்னும் பலரும் சேர்க்கப்பட்டிருந்தனர். இவர்களை சி.பி.ஐ.(எம்) கட்சியின் கன்னியாகுமரி மாவட்டக்குழு, கட்சியிலிருந்து வெளியேற்றவும் தன்னிச்சையாக முடிவு செய்து நிறைவேற்றியது. இதனை எதிர்த்து பல கிளைக் கமிட்டிகளிலுள்ள தோழர்கள் குரல்கொடுத்தும் பலனில்லை. பல தொழிலாளர்கள் கட்சியிலிருந்து ராஜினாமா செய்து, சி.பி.ஐ. கட்சிக்கும், சி.பி.ஐ.(எம்) கட்சிக்கும் வித்தியாசம் ஏதுமில்லை என்று காரணங்களையும் தெரிவித்தனர். சி.பி.ஐ.(எம்) கட்சியின் குமரி மாவட்டக் குழுவின் பொறுப்பாளர்கள் எதற்கும் செவிசாய்க்கவில்லை என்பதே தோழர்களின் அனுபவமாகும்.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் சி.பி.ஐ.(எம்-எல்) கட்சியின் தோற்றம்

சி.பி.ஐ.(எம்) கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட தோழர்கள் விரக்தியால் முடங்கிடவில்லை. இக்காலகட்டத்தில் வட மாநிலங்களில் தோற்றுவிக்கப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) கிளை கேரளத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்தது. சி.பி.ஐ.(எம்.எல்) கட்சியின் கேரளக் கமிட்டியுடன் தொடர்புகொண்டும், தமிழகத்தில் பல பகுதிகளிலிருந்த சி. பி.ஐ.(எம்.எல்) கட்சித் தோழர்களுடன் தொடர்பு கொண்டும் விவாதிப்பது என்று முடிவெடுத்தனர்.

இம்முடிவின் விளைவாக 1968-ம் வருடம் அக்டோபர் மாதம் நாகர்கோவில், போஸ்காலனியில், ஆசிரியரும், மாணவர்களும் தங்கியிருந்த வீட்டில் இரவு 7 மணியளவில் தோழர்கள் குழந்தைசாமி, நாராயணன், தாஸ், தங்கப்பன், ராஜசேகரன் மற்றும் இருவர் கலந்துகொண்ட கூட்டம் நடத்தப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசியல் நிலமைகள், ஆளும் வர்க்கத்தின் கருவியாக சி.பி.ஐ.(எம்) கட்சி செயல்படுவது குறித்து தீவிரமாக விவாதித்து, சி.பி.ஐ.(எம். எல்.) கட்சியை கன்னியாகுமரி மாவட்டத்தில் கட்டியமைக்க முடிவு செய்தனர்.

இவர்கள் அனைவரும் ஓய்வின்றி, தோட்டத்தொழிலாளர்கள், அரசு அலுவலகப் பணியாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் பல தரப்பட்ட உழைக்கும் மக்களிடையே கட்சிப் பிரசுரங்களையும், பிரச்சாரக் கூட்டங்களையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடத்தினர். இரப்பர் தோட்ட முதலாளிகளின் ஈவிரக்கமற்ற கரண்டலையும், அன்றாட அடக்குமுறை நடவடிக்கைகளையும் எதிர்க்கும்படியும், போராட்டங்கள் நடத்தும்படியும் தொழிலாளர்களிடம் பிரச்சாரம் செய்து கிளர்ச்சிகள் பலவற்றை நடத்துவதற்கு முன்னோடிகளாக செயல்பட்டுவந்தனர். இவற்றில் தோழர் தாஸ் அவர்கள் தன்னுடைய குடும்பத்தைப் பற்றி கவலைப்படாமல் தோட்டத் தொழிலாளர்களுடனிருந்து, அவர்கள் தருகின்ற கஞ்சியைக் குடித்து, அவர்களுடன் போராட்டத்திலும் கலந்து கொண்டு, சிறைக்கும் செல்வார். சிறைக்குள்ளும் தொழிலாளர்களை சோர்வடையவிடாமல் ஊக்கப்படுத்துவார் என்றும் இன்றும் கூட பல தொழிலாளிகள் நம்மிடம் கூறுகின்றனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(எம்.எல்) வளர்ந்து வருவதைக் கண்டு, தோட்ட முதலாளிகளும், சமரசக் கட்சிகளும் அஞ்சிநடுங்கினார்கள். சி.பி.ஐ.(எம்.எல்) கட்சியைப்பற்றி, மக்களிடமும், அரசு அதிகாரிகளிடத்திலும் தவறான புகார்களைப் பரப்பினார்கள்.

## சி.பி.ஐ.(எம்.எல்) கட்சி மீதான அடக்குமுறைகள்

கன்னியாகுமரி மாவட்டத்தில், இரப்பர் தோட்டப் பகுதியில் செயல்பட்டு வந்த சி.பி.ஐ.(எம்.எல்) கட்சியின் முன்னணித் தோழரும், தோட்டத் தொழிலாளர் சங்கப் பொறுப்பாளர்களில் ஒருவராக செயல்பட்ட வர்கீஸ் என்ற தொழிலாளியையும், காட்டுவேலை செய்து வந்த உஷாதேவி என்ற பெண் தொழிலாளியையும் வேளி மலை எஸ்டேட் முதலாளி சி.குரியன் வேலை நீக்கம் செய்ததை கண்டித்து பல போராட்டங்களும், பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றதில் பலன் ஏதுமில்லை. மேலும் வேளி மலை எஸ்டேட் முதலாளி சி.குரியனின் குண்டர்படைத்தாக்குதலில் ஒரு அப்பாவித் தொழிலாளி இறந்துவிட்டார். தொழிலாளியின் மரணத்திற்கு பின்பு அங்குள்ள தொழிலாளர்களிடம் பீதி நிலவியது. சி.பி.ஐ.(எம்.எல்) கட்சித் தோழர்களைக் கண்டு பேசவே மக்கள் அஞ்சினர். வேளி மலை எஸ்டேட் முதலாளியும், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரும் நெருங்கிய நண்பர்களாகவும், பொழுதுபோக்குச் சங்கத்தின் உறுப்பினர்களாகவும் இருந்தார்கள். இவ்வுறவைப் பயன்படுத்தி, தோட்டப் பகுதியில் ஆயுதப் படைக்காவலர்களை முகாமிடச் செய்து மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தினார்கள்.

வேளி மலை எஸ்டேட் முதலாளி குரியனின் கைக்கூலி குண்டர்கள், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரின் முதலாளித்துவ விசுவாச நடவடிக்கைகளை முறியடிப்பது குறித்து ஆலோசிக்க, குலசேகரம், சி.ஐ.டி.யூ. அலுவலகத்தில் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேசிய பலரும் சட்ட பூர்வமான நடவடிக்கைகளை வலியுறுத்தினர். தோழர் தாஸும், கிருஷ்ணப் பிள்ளையும் எழுந்து சட்ட பூர்வநடவடிக்கையால் இறந்த தொழிலாளியை உயிருடன் பெறமுடியுமா? தொழிலாளியைக் கொன்ற வேளி மலை எஸ்டேட் முதலாளி

www.tamilarangam.net

குரியனைப் பழி தீர்க்க வேண்டும். பழிக்குப் பழி, இரத்தத்திற்கு இரத்தம் சிந்தினால் தான் தொழிலாளிகளைக் கொலை செய்யும் முதலாளிகளுக்கும், காவல் துறை குண்டர் படைக்கும் செங்கொடி மீது மரியாதையும், பயமும் ஏற்படும் என்று விவரித்துப் பேசினார்கள். பழிக்குப்பழி வாங்கும் நடவடிக்கைக்காக சி.பி.ஐ.(எம்.எல்.) கட்சித் தோழர்கள் முன்னின்று செயல்படுத்த தயாராகயிருப்பதாகவும், உயிரைவிட செங்கொடி இயக்கத்தின் இலட்சியமே மேலானது என்றும் வீர உரையாற்றியுள்ளனர்.

## நம்பிக்கைத் துரோகம்

தொழிலாளர் சங்கத்தின் பேரவைக் கூட்டத்தில் தோழர்கள் தாஸும், கிருஷ்ணப்பிள்ளையும் பேசிய பேச்சுக்களின் விவரம் ஒரு வார்த்தை கூட விட்டுவிடாமல் அப்படியே வேளி மலை எஸ்டேட் முதலாளி குரியனுக்கு தொழிலாளி வர்க்கத்தின் விரோதிகள் தகவல் கொடுத்து, தங்கள் விசுவாச ஊழியத்தை செய்தனர். இதையறிந்ததுமே வேளிமலை எஸ்டேட் முதலாளியும், நிர்வாகிகளும் உஷாராகிக் கொண்டனர். இதரப் பகுதிகளில் உள்ள தோட்ட முதலாளிகளும் உஷாராகிக் கொண்டதுடன், துரோகிகளை ஊக்குவித்து ராஜமரியாதையும் கொடுத்தனர். துரோகிகளுக்கு இது பொற்காலமாக அமைந்து, உடமையாளர்களாகத் தங்கள் வாழ்க்கையைத் தொடர்ந்தனர். தோழர்கள் தாஸ், கிருஷ்ணப்பிள்ளை, லூயிதேவசகாயம் ஆகியோர் மீது குற்றவியல் பிரிவுகளில் கொலை முயற்சி வழக்கும் பதிவுசெய்து தேடும்படி காவல்துறையை தமது பண பலத்தால் முதலாளிகள் செயல்படுத்தினர்.

வேளி மலை எஸ்டேட் முதலாளி குரியன் தங்கியிருக்கும் பங்களாவில் நடைபெறும் அனைத்து நடவடிக்கைகள் குறித்தும் தொழிலாளர்கள், தோழர் தாஸுக்கும், லூயி தேவசகாயம், கிருஷ்ணப்பிள்ளை ஆகிய தோழர்களுக்கும் அவ்வப்போது செய்தி அனுப்பிக் கொண்டிருந்தனர். எஸ்டேட் முதலாளி குரியன் தாக்கல் செய்த புகாரின் அடிப்படையில் காவல் துறை பொய்வழக்கு ஒன்றைப் பதிவுசெய்து கைது செய்யத் தொடங்கியது. பல இடங்களிலும் தேடுதல் வேட்டையைத் தொடர்ந்தது. இதனால் தோழர்கள் தாஸ், லூயி தேவசகாயம், கிருஷ்ணப்பிள்ளை மற்றும் பல முக்கியத் தோழர்கள் தலைமறைவாகி விட்டனர்.

## புலனாய்வுத் துறை செய்த வழக்கின் தன்மை

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) சேர்ந்த தோழர்கள 1. கிருஷ்ணப்பிள்ளை, 2. செல்லப்பன், 3. வாமதேவன், 4. குட்டப்பன், 5. தாஸ், 6. லூயி தேவ சகாயம், 7. நாராயணன் ஆகியோர் ஒன்று கூடி, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 5 நிலப்பிரபுக்களை கொலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்து அழித்தொழிக்கவும், அவர்களுடைய நிலங்களை ஏழைகளுக்கு வினியோகிக்கவும் சதி திட்டம் தீட்டியதோடு, சட்டவிரோதமாக ஆயுதங்களும், வெடிகுண்டுகளும் தயாரித்தார்கள் என்றும் வெடிகுண்டு தயாரிப்பில் பூவன்கோடு என்ற இடத்தைச் சேர்ந்த வாட்ச்சர் வேலை பார்த்துவந்த செல்வராஜ் என்பவர் வெடிகுண்டு வெடித்து இறந்துவிட்டதாகவும், பிணத்தை வெளியிலுள்ள உறவினர்களுக்குத் தெரியாமல் மறைத்துவிட்டதாகவும் மேலும் பல குற்றங்களை உள்ளடக்கி வழக்குப்பதிவு செய்து தேடுதல் வேட்டையை அதிகரித்தனர்.

இந்நிலைமையில் கேரளத்திலுள்ள சி.பி.ஐ.(எம்.எல்.) தோழர்களை கேரளப் போலீசார் சித்திரவதை செய்தனர். கேரளப் போலீசாரிடம் சிக்கிக் கொண்ட பலரும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கட்சித் தொடர்புகளை அடிதாங்க முடியாமல் தெரிந்ததைக் கூறிவிட்டனர். அதாவது தளபதி, ஆசான், மாஸ்டர், பட்டாளம் என்று தங்களுக்குத் தெரிந்த பெயர்களைக் கூறி, இவர்கள் தான் குமரிமாவட்ட கட்சிப் பொறுப்பாளர்கள் என்ற விவரமும் கூறிவிட்டனர்.

கன்னியாகுமரி மாவட்ட புலனாய்வுத் துறைத் திணறியது. கேரள போலீசாரின் செய்தியின் அடிப்படையில் தளபதி, ஆசான், மாஸ்டர், பட்டாளம் போன்ற பெயருள்ளவர்களைக் கண்டுபிடித்து கைது செய்வதற்காக புலனாய்வுத் துறை தமிழகம் முழவதும் விசாரித்தது. கேரளத்திலும் விசாரித்தது. கண்டுபிடிக்க முடியாமல் திணறியது. கடைசியாக, கன்னியா குமரி மாவட்டத்திற்கு கேரளாவில் பிடிபட்ட ஒரு தோழரை அழைத்து வந்து, பூதப் பாண்டிகாவல் நிலையத்தில் வைத்து விசாரித்து, போலீசார் வசமிருந்த குமரி மாவட்டத் தோழர்களின் உருவப்படத்தையும் காட்டி விசாரித்தும், அடித்தும் துன்புறுத்தியதால் தான், தளபதி என்பவர் கிருஷ்ணப்பிள்ளை என்றும், ஆசான் என்பவர் தோழர் தாஸ் என்றும், மாஸ்டர் என்பவர் தோழர் லூயி தேவசகாயம் என்றும் காவல் துறைக்குத் தெரிந்தது. காவல் துறையின் உளவுப் பிரிவினரும், உள்ளூர் காவலர்களும், சில வேளைகளில் ஆயுதப் படைக் காவலர்களும் தோழர்களின் உறவினர்களைத் துன்புறுத்திப் பீதியடையச் செய்தனர். இதனால் தோழர் தாஸின் சித்தப்பா மகன் அன்பையன், மணி உட்பட பலர் பாதிக்கப்பட்டனர். தோழர் தாஸின் துணைவியார் தோழர் லைசம்மாளிடமும் காவல்துறை எவ்வளவோ மிரட்டியது. தோழர் லைசம்மாளிடமிருந்து கடுகளவுக் கூட, தோழர்களின் இருப்பிடத்தையோ, வேறு செய்திகளையோ தெரிந்து கொள்ள முடியவில்லை. இதற்குப் பிறகு 1970-ம் வருடம் நவம்பர் மாதம் 24-ம் தேதி தோழர் கிருஷணப்பிள்ளை-தோட்டத்தொழிலாளர் ஒருவருடைய இருப்பிடத்திரல் தங்கியிருப்பதையறிந்து முற்றுகையிட்டு கைது செய்தது. தோழர் கிருஷ்ணப்பிள்ளையை நீதி மன்றத்தில் ஆஜர் செய்து நீதிமன்றக்

www.tamilarangam.net

காவலில் வைக்காமல் காவல் நிலையத்திலேயே பல நாட்கள் வைத்திருந்தனர்.

காவல் துறையின் அடக்குமுறையால் சுமார் ஒருவருட காலத்திற்கும் மேலாக கேரள எல்லையோரங்களிலுள்ள இரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் அவர்களுக்கு தொழிற்சங்க வகுப்புகள், அரசியல் வகுப்புக்களை நடத்திக்கொண்டே அவர்களது அரசியல் தரத்தை உயர்த்திட, தோழர் லூயி தேவசகாயம் அவர்களுடன் இணைந்து பணியாற்றிக் கொண்டிருந்தார் தோழர் தாஸ்.

1971-ம் வருடம் மே மாதம் வர்க்க எதிரிகள் தோழர் தாஸ் பற்றிய தகவலைத் தெரிவித்ததன் மூலமாக அருமனைக்கருகிலுள்ள மாறப்பாடி வட்டாரத்தில் சூட்டூர் கோணம் என்னுமிடத்தில் கைது செய்யப்பட்டு, கைகளில் விலங்கிடப்பட்டு, நீண்ட சங்கிலியால் விலங்குடன் பொருத்தப்பட்டு வீதியில் தோழர் தாஸ் அவர்களை காவல் துறையினர் இழுத்துச் சென்றபோது அவர், "மார்க்சிஸம்-லெனினிஸம் ஜிந்தாபாத், தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்! ஒரு தாஸ் போனால் ஆயிரமாயிரம் தாஸ்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வருவார்கள் புரட்சி ஓங்குக! புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்தை இந்திராகாந்தி, கருணாநிதி, கேரளத்தின் அச்சுதமேனன் போன்றவர்களின் அடக்குமுறையால் அழித்து விடமுடியாது! கம்யூனிஸ்ட் கட்சி வெல்லும், செங்கொடி ஜெயிக்கும்"! என்று கூட்டமாக சாலையோரத்தில் நின்று கொண்டிருந்த பொது மக்களிடையே உரையாற்றினார். கூடியிருந்த மக்களுக்கு வணக்கம் தெரிவித்தார் என்றும், இதற்குப்பிறகு தான் அவர் பேருந்தில் ஏறிச் சென்றதை, அருமனை வட்டாரத்தில் வசிக்கின்ற மக்களில் பலரும் இன்றும் கூட அவரது வீரத்தை, உறுதியை வியப்புடனும், பெருமையுடனும் நினைவு கூர்கின்றனர். கைதுக்குப் பின்னர் பாளையங்கோட்டை மத்தியச் சிறையில் விசாரணைக் கைதியாக அடைக்கப்பட்டார்.

## குற்றப்பத்திரிக்கை விபரம்

புலனாய்வுத் துறை தயார் செய்த வழக்கின் தன்மை என்ற பகுதியில் ஐந்து நிலப் பிரபுக்களை கொலை செய்து அழித்தொழிக்கவும், அவர்களுடைய நிலங்களை ஏழைகளுக்கு விநியோகிக்கவும் சதித்திட்டம் தீட்டியதாக குறிப்பிட்டுள்ளோம். ஐந்து நிலப்பிரபுக்கள் யார் என்பதையும் காவல்துறையின் குற்றப்பத்திரிக்கையில் கூறப்பட்டு இருந்தது. அவை பின் வருமாறு:-

1. வேளி மலை எஸ்டேட் அதிபர் சி. குரியன்–நாகர்கோவில்
2. டாக்டர் மத்தியாஸ்–நாகர்கோவில்

www.tamilarangam.net

3. மகேந்திரகிரி எஸ்டேட் அதிபர்–மாத்யூ ஆப்ரகாம்

4. பயோனியர் சாஸ்தா–நாகர்கோவில்

5. எம்.எம்.மாத்யூ, எம்.எம். ஜார்ஜ்–குலசேகரம்

இவர்கள் ஐந்து நிலப்பிரபுக்களும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவு உடைய வளமிக்க பூமியை தன்கைவசப்படுத்தியவர்கள். ஏழைகளிடம் இருந்த நிலங்களை தங்கள் உடமையாக்கிக்கொள்ள உழைக்கும் மக்களை அரசு ஆதரவுடன் வெளியேற்றி நிலங்களை அபகரித்த கொடிய கரண்டல் கொள்ளையர்கள் தான் என்பதில் சந்தேகமே கிடையாது.

காவல் துறை பத்மநாபபுரம் (தக்கலை) உதவி அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த குற்றப் பத்திரிக்கையில் குறிப்பிட்டிருந்த நிலப்பிரபுக்களின் பெயர் விபரம் கூறியுள்ளோம். அவர்களுடைய நிலங்களை ஏழைகளுக்கு விநியோகம் செய்வது முக்கியத் திட்டம் என்பதையும், ஆயுதங்கள், வெடிகுண்டுகள் தயாரித்தல் பற்றியும் விவரித்துள்ளோம். காவல்துறையானது, தான் பதிவு செய்துள்ள வழக்கில், எதிரிகளுக்கு தண்டனை கிடைக்க வேண்டும் என்பதற்காக, மத்தியிலுள்ள இந்திராகாந்தி அரசை வீழ்த்த சதி முயற்சி செய்தார்கள் என்றும் கூறப்பட்டிருந்தது. இது தான் காவல் துறையின் முக்கிய குற்றச்சாட்டு.

ஏனென்றால், ஐந்து நிலப்பிரபுக்களும் உயிருடன் உள்ளனர். இவர்களுடைய நிலமும் ஏழைகளுக்கு விநியோகித்ததாக நிரூபிக்க முடியாது. அப்படி விநியோகம் நடைபெறவுமில்லை. இரண்டாவதாக உள்ள அம்சம் என்னவென்றால், தோழர்கள் வெடிகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டதாகக் கூறியுள்ள குற்றச்சாட்டில் பூவன்கோடு என்ற இடத்தைச் சேர்ந்த வாட்ச்சர் வேலை பார்த்து வந்த செல்வராஜ் வெடிகுண்டு வெடித்து இறந்துவிட்டதாகவும், அவரது பிணத்தை மறைத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்த கொலை குற்றமாகும்.

மாஜிஸ்திரேட் நடுவர் மன்றத்திலிருந்து இவ்வழக்கு மேல் விசாரணைக்காக உதவி அமர்வு நடுவர் மன்றத்திற்கு மாற்றப்பட்டு விசாரணைத் தொடங்கிய போது குற்றச் சாட்டுப் பத்திரிக்கை 330 பக்கத்தில் தயாரிக்கப்பட்டு தோழர்களுக்கு குற்றப்பத்திரிக்கை நகல் வழங்கப்பட்டு, மறுவாய்தாவில் குற்றச்சாட்டுகுறித்த பதிலை, வழக்கிலுள்ள எதிரிகளிடம் நடுவர் கேட்க வேண்டும், என்பது விசாரணை விதி. இவ்விதி முறைகளின்படி நடுவர் கேள்வி கேட்க ஆரம்பித்தார்.

தோழர்கள் குற்றப்பத்திரிக்கையைப் படித்து குற்றச்சாட்டை நன்கு புரிந்துகொண்டனர். காவல்துறை உயர் அதிகாரிகளும், வேளி மலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எஸ்டேட்அதிபர் சூரியனும் சேர்ந்து தங்கள மீது சுமத்தப்பட்டுள்ள பொய்யான கொலைக்குற்றத்தைக் கண்டு குமுறினார்கள். 1971-ம் ஆண்டில் சி.பி.ஐ. (எம்.எல்.) கட்சித் தோழர்கள் மீது கருணாநிதி ஆட்சியின் காவல் துறை கொலை வழக்குப் பதிவு செய்வது சாதாரண நிகழ்ச்சியாகவே இருந்துள்ளது. இதனால் குற்றச்சாட்டை மறுத்து வாதாடுவதில்லை. வாதாடி என்ன பயன்? நீதிபதியும் ஆளும் வர்க்கத்தின் கருவிதான் என்று முடிவு செய்து, நீதிமன்ற விசாரனையைப் புறக்கணித்தே வந்தனர். இது சி.பி.ஐ. (எம்.எல்.) கட்சியின் முடிவுகளுள் ஒன்றாகும்.

பத்மநாபபுரம் உதவி அமர்வு நீதி மன்ற நடுவர், குற்றச் சாட்டு குறித்த பதில் கேட்கத் தொடங்கியதும், தோழர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்கள் கட்சியின் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்து விட்டு, குற்றப்பத்திரிக்கையைக் கிழித்து நடுவரின் முகத்தை நோக்கி வீசியெறிந்ததில் தோழர் தாஸும் ஒருவர். தோழர்கள் தன்னை நோக்கி வீசுவதைக்கண்ட நீதித்துறை நடுவர் எழுந்து தனது அறைக்குள் ஓடிவிட்டாராம். அறைக்குள்ளேயிருந்து சிறைக்காவலை நீடித்து உத்திரவு பிறப்பித்தார் என்பதும் உண்மையேயாகும். காவல்துறை தரப்பு விசாரணைகள் இவ்வழக்கில் முடிவு பெற்றதும் தோழர்கள் அனைவருக்கும் 7 வருட சிறைத்தண்டனையை நீதி மன்றம் வழங்கியது.

விசாரணைக் காவல் கைதியாக தோழர்கள் சிறையிலிருந்த போது, இவர்களை உறவினர்கள் பார்க்க சிறை அதிகாரிகள் அனுமதிப்பதேயில்லை. சிறை அதிகாரிகளை க்யூ பிரிவு சி.ஐ.டி. அதிகாரிகள் கட்டுப்படுத்தினார்கள். இதனால் இவ்வழக்கில் தோழர்களுக்கும் க்யூ பிரிவு சி.ஐ.டி. அதிகாரிகளுக்கும் பல முறை தகராறுகள் ஏற்பட்டிருந்ததாகவும் தோழர்கள் கூறியுள்ளனர்.

தமிழகத்திலுள்ள மத்தியச் சிறை, கிளைச் சிறைகளில் சி.பி.ஐ.(எம்.எல்.) கட்சி, அதாவது நக்சலைட் கைதி என்றால் ஒரு தனி மரியாதை இன்றும் கிடைக்கிறதென்றால், சி.பி.ஐ.(எம்.எல்.) கட்சியின் தோழர்கள் ஆரம்பகாலம் முதல் சிறை நிர்வாகம், மற்றும் கியூ பிரிவு புலனாய்வுத்துறையின் அடக்குமுறைகளை உறுதியுடன் எதிர்த்து வந்தது தான் காரணமாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சி.பி.ஐ.(எம்.எல்.) கட்சித் தோழர்களான கிருஷ்ணப்பிள்ளை, செல்லப்பன், வாமதேவன், குட்டப்பன், தாஸ், லூயி தேவசகாயம் ஆகியோர்களுக்கு நீதித்துறை நடுவர் மன்றம் 7 வருட சிறைத் தண்டனை வழங்கியதுமே, இத் தோழர்கள் அனைவரும் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

www.tamilarangam.net

## சிறைக்குள்ளும் போராட்டங்கள்

திருச்சி மத்தியச் சிறை நிர்வாகம் நக்சலைட் தோழர்களை கடுமையாக ஒடுக்கியது. கைதிகளுக்குரிய உரிமைகள் பல மறுக்கப்பட்டன. எதற்கெடுத்தாலும் க்யூ பிரிவுப் போலீஸைக் காரணம் காட்டியது. இதற்கு எதிராக திருச்சி மத்தியச் சிறையிலுள்ள நக்சலைட் தோழர்கள் போராட வேண்டியக் கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. தோழர்கள் சிறை நிர்வாகத்தைக் கண்டித்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியுள்ளனர். தோழர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தை முறியடிப்பதற்காக, திருச்சி மத்திய சிறை நிர்வாகம் 1972-ம் வருடம் அக்டோபர் மாதம் 20ம் நாள் உண்ணாவிரதமிருந்த நக்சலைட் தோழர்கள் மீது நடத்திய தாக்குதலில் தோழர் தாஸ் கடுமையாகப் பாதிக்கப்பட்டார். அவரது கை, கால்கள் ஒடிக்கப்பட்டன. மண்டை உடைந்து விட்டது, இப்படிப்பட்ட கொடியதாக்குதல் விபரத்தை தமிழ், தமிழர் இயக்கத்தின் பொதுச் செயலாளர் மதிப்பிற்குரியத் தோழர் தியாகு அவர்கள் "சுவருக்குள் சித்திரங்கள்" என்ற நூலில் பக்கம் 168 முதல் 179 வரையுள்ள "பொய்ச் செய்தி மீது போர்" மற்றும் "இரத்த உறவு" என்ற கட்டுரை மூலம் விவரித்துள்ளார்.

## மறுபிறவியெடுத்த தோழர் தாஸ்

திருச்சி மத்திய சிறையில் 20.10.72-ம் நாள் நடைபெற்ற தாக்குதலில் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, கை கால்கள் ஒடிக்கப்பட்டு உடம்பெல்லாம் இரத்தம் வழிய கொடிய காயங்களுடன் திருச்சி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டபோது சுய நினைவேயில்லை. உடல் முழுவதும் மொத்தம் 41 தையல் போடப்பட்டு, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்-களின் பேருதவியால் தோழர் தாஸ் மறுபிறவியாகத் திரும்பினார் சிறைக்குள்.


தன்னுடைய தண்டனைக் காலம் முடிவுபெற்று 1975-ல் விடுதலையானார். திருச்சி மத்திய சிறைவாசலைத் தாண்டி வெளிவந்த உடனேயே தயார் நிலையிலிருந்த கன்னியாகுமரி மாவட்டத்தின் கியூ பிரிவு போலீஸ் சிறைவாசல் முன்பே உள் நாட்டுப் பாதுகாப்புப் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து, பாளையங்கோட்டை மத்திய சிறையில் (அவசர கால நிலைமைப் பிரகடனம் அமுலில் இருந்தபோது) மிசாக் கைதியாக அடைக்கப்பட்டார். அவசர கால நிலைமைப் பிரகடனம் ரத்து செய்யப்பட்டு, மொரார்ஜி தேசாய் பாரதப்பிரதமராகப் பதவியேற்ற சில நாட்களில் நாடு முழுவதிலுமுள்ள மிசாக்கைதிகளை உள்துறை அமைச்சகம் விடுதலை செய்தது. இக்கால கட்டத்தில் தான் தோழர் தாஸும் விடுதலையாகி வீட்டிற்கு வந்து சேர்ந்தார்.

www.tamilarangam.net

## குடும்பத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள்

தோழர் தாஸுக்கு லைசம்மாள் என்ற துணைவியும், ராஜு, பாலு என்ற இரண்டு மகன்களும், லீலாபாய் என்ற மகளும் வாரிசுகளாக உள்ளனர். தோழர் தாஸின் உழைப்பால் கிடைத்த குறைந்தளவு ஊதியத்தைக் கொண்டு ஜீவனம் நடத்தி வந்துள்ளனர். தோழர் தாஸின் தலை மறைவுக் காலம் தொட்டு அவர் விடுதலையாகி வரும் வரையிலும், தோழர் லைசம்மாள் பல்வேறு விதமான கூலி வேலைக்குச் சென்று அரை வயிற்றுக் கஞ்சியைத் தானும் குடித்து, குழந்தைகளுக்கும் கொடுத்து வளர்த்து வந்துள்ளார். தோழர்கள் லைசம்மாளும், தாஸும் அரசியல் ரீதியில் ஒரே கருத்துடையவர்களாகயிருந்து, பொருளாதார நெருக்கடிகளை சமாளித்து வாழ்க்கை நடத்தியுள்ளனர்.

தோழர் தாஸ் அவர்கள் 8 ஆண்டுகள் சிறையிலிருந்த காலத்தில் வேலையில்லாத நாட்களில், மழைக்காலங்களில் தோழர் லைசம்மாளும், குழந்தைகளும் பட்டினி கிடக்க வேண்டிய நிலைமையும் அனுபவித்து உள்ளனர். இந்நிலைமையை அறிந்த தோட்டத் தொழிலாளர்கள் பலரும் தோழர் லைசம்மாளுக்கு பல்வேறு உதவிகள் செய்து பட்டினிச் சாவிலிருந்து தோழர் தாஸ் அவர்களின் வாரிசுகளை உயிர் பிழைக்கச் செய்துள்ளதை இன்றும் கூட அறிய முடிகின்றது.



தோழர் தாஸ் தனது பேரன்களுடன்

www.tamilarangam.net

தோழர் தாஸின் பிள்ளைகள் மூவரும் பள்ளி இறுதி வகுப்பு வரை-எஸ்.எஸ்.எல்.சி.-தான் படித்துள்ளனர். இவர்களது படிப்புக்கும், ஆடைகள், பள்ளிக் கட்டணங்கள் செலுத்துவது போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும், அவ்வப்போது தன்னால் முடிந்தளவுக்கு எல்லாவிதத்திலும் உதவியவர் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த தோழர் என்.தங்கப்பன் அவர்களேயாகும். இவ்வுதவியை தோழர்கள் தாஸும், லைசம்மாளும் தோழமை உணர்வுடன் பெரிதும் மதித்து வந்ததை பல முறை நேரில் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

இப்படிப்பட்ட பல்வேறு உதவிகள் பெற்றாலும் கூட இது குடும்பத்தின் முழுமையான செலவுகளுக்குப் போதவில்லை, பற்றாக்குறை ஏற்பட்டதன் காரணமாக கடன் ஏற்பட்டது. தோழர் தாஸைப் பற்றி தரக்குறைவாக அவதூறுப் பிரச்சாரத்தை சி.பி.எம். கட்சியின் குமரி மாவட்டக்குழு, தோட்டத் தொழிலாளர்களிடம் நடத்தியதால், தொழிலாளர்களின் ஆதரவும் குறையத் தொடங்கியது. இந்நிலைமையில் தான் தோழர் லைசம்மாள் அவர்கள், அருமனை மாறப்பாடி பகுதியிலிருந்த தனது சொந்தக் குடியிருப்பு வீட்டை விற்றுக் கடனை செலுத்திவிட்டு, பூர்விக இடத்தைக் காலி செய்து விட்டு, கன்னியாகுமரி மாவட்டத்தின் வட எல்லையான கோதையார் கீழ் தங்கல் என்ற பகுதியில் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தில் ஒரு சிறு குடிசையமைத்து குடியேறினார்.

சிறையிலிருந்து வெளி வந்த தோழர் தாஸ், மீண்டும் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டியமைக்கும் வேலையைத் தொடங்கினார். சி.பி.ஐ.(எம்.எல்) கட்சி, தமிழகத்தில் பல குழுக்களாகப் பிளவுபட்டிருப்பதைக்கண்டு வேதனைப்பட்டார். சி.பி.ஐ.(எம்.எல்) கட்சியின் முடிவுகள் பலவற்றில் தவறுகள் உள்ளதை மனப் பூர்வமாக ஒப்புக் கொண்டு, இனி என்ன செய்ய வேண்டும் என்ற கண்ணோட்டத்தோடு பல தொழிலாளிகளிடம் விவாதித்து வந்தார். சி.பி.ஐ.(எம்.-எல்) கட்சி தான் சி.பி.எம். கட்சியின் முக மூடியை நொறுக்கி அம்பலப்படுத்தியது என்பதையும், இது சி.பி.ஐ.(எம்.-எல்) கட்சிக்கு பெருமை என்றும் சுட்டிக் காட்டுவார்.

தோழர் தாஸ் அவர்கள் உழைக்கும் மக்களின் உரிமைப் பிரச்னைகளுக்காகவும், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், தோட்டம் தொழிலாளர்களுக்காக நடத்தப்பட்ட பல்வேறு போராட்டங்களிலும் ஈடுபட்டு மறியல் போர் நடத்தியும், தனது வாழ்நாளில் 23 முறை கைதாகி 10 வருடம் சிறைவாசம் அனுபவித்துள்ளார். தமிழக விவசாய சங்கம் நடத்திய போராட்டத்திலும் தோழர் தாஸ் அவர்களை, எம்.ஜி.ஆர். தலைமையிலான காவல் துறை தடுப்புக் காவல் சட்டப் பிரிவில் கைது செய்து பாளையங்கோட்டை மத்திய சிறையில் தனிக் கொட்டடியில் அடைத்தது. தனிக் கொட்டடியில்

www.tamilarangam.net

தன்னை அடைக்கப்பட்டதைக் கண்டித்து மறு நாள் காலை முதல் உண்ணாவிரதப் போரைத் தொடங்கினார். விவசாய சங்கப் போராட்டத்தின் போது தடுப்புக்காவல் சட்டப்பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள விவசாயிகள், மற்றும் தொழிலாளர்களோடு ஒன்று சேர்த்து தன்னையும் போராட்டக்கைதியாகக் கருத வேண்டும் தனிமைப்படுத்தக் கூடாது என்பதே இவரது கோரிக்கையாகும்.

இவரது உண்ணாவிரதப் போராட்டம் மற்றும் இவர் தனிக் கொட்டடிக்குள் அடைக்கப்பட்டிருக்கும் விவரம் விவசாயப் போராட்டக் கைதிகள் பலரும் அறிந்து, ஜெயிலர் விஜயராகவன் என்பவரைச் சந்தித்து தங்கள் கண்டனத்தை தெரிவித்தனர். சிறைக்கண்காணிப்பாளர் வந்ததும் அவரிடம் அனுமதிபெற்று மாற்றுவதாகக் கூறினார். இந்நிலையில் விவசாயப் போராட்டக் கைதிகளும் தங்களது பிரச்சினைகளை வலியுறுத்தி அடையாள உண்ணாவிரதம் இருக்க ஆலோசித்து வந்தனர். இதனையறிந்த சிறை நிர்வாகம், தோழர் தாஸ் அவர்களை தனிக் கொட்டடியிலிருந்து விடுவித்து விவசாயப் போராட்டக் கைதிகளோடு ஒன்று சேர்த்தது. சில நாட்களில் விவசாயிகள் விடுதலை செய்யப்பட்டபோது, தோழர் தாஸும் விடுதலையானார்.

இக் காலகட்டத்தில்தான் வடமாநிலங்களில், புரட்சிகர ஸ்தாபனங்களின் ஒற்றுமை, அரசியல் ஒற்றுமை, கம்யூனிஸ்ட் ஒற்றுமை ஆகியவற்றை



குமரி மாவட்டத்தில் நடைபெற்ற மே தின ஊர்வலத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மையப் பொருளாகக் கொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சியை உருவாக்கும் பணிகள் தொடங்கப்பட்டிருப்பதை அறிந்து, திருவனந்தபுரத்திலுள்ள தோழர் லூயி தேவசகாயம், மேல்புறம் வட்டாரத்திலுள்ள தோழர் என்.தங்கப்பன் மற்றும் பல தோழர்களிடம் தொடர்பு கொண்டு, விவாதங்கள் நடத்தப் பெற்று, சி.பி.ஐ.(எம்.–எல்) கட்சியின் நடைமுறைத் தந்திரங்கள், முடிவுகளில் ஏற்பட்ட விரோதச் செயல்களை ஆராய்ந்து, மார்க்சிஸ-லெனினிச தத்துவார்த்த தெளிவுடன் இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சியின் அமைப்பாளர்களோடு தொடர்பு கொண்டார்.

வடமாநிலத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கெதர் கட்சியின் அமைப்புக்குழுவும், ஓரிரு பிரதிநிதிகளை அனுப்பி, தோழர் தாஸ் உட்பட மற்றத் தோழர்களைச் சந்தித்து விவாதித்தது. விவாதத்தின் முடிவாக இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சியின் அமைப்புக்குரிய மாநாட்டிலும் (Founding Congress), கலந்தாலோசனை (Consultative Congress) மாநாட்டிலும் பல தோழர்களுடன் சென்று கலந்து கொண்டார். இதன் பின்னர் இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சியை தமிழகத்தின் பல பகுதிகளிலும் கட்டியமைத்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தனியார் ரப்பர் தோட்டம், அரசு ரப்பர் தோட்டங்களில் உறுதியான தலைமைப் பொறுப்புடையதும், வர்க்க உணர்வும் கொண்ட தொழிலாளர் சங்கங்கள் இல்லாததால், தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு, கரண்டல் அடக்குமுறைகள் தீவிரமடைவதைப் பற்றிச் சிந்தித்தார். பெரும்பான்மையான தொழிலாளர்கள் இந்திய தேசிய தொழிற்சங்கக் காங்கிரஸ் மற்றும் இந்திய தொழிற்சங்கக் காங்கிரஸ் மற்றும், இந்திய தொழிற்சங்க மையம் (I.N.T.U.C. and C.I.T.U.) ஆகியவற்றில் தான் உறுப்பினர்களாகயிருந்தனர். இவ்விரண்டு சங்கமும் வர்க்கப்போராட்டப் பாதையைக் கை கழுவியதுடன் வர்க்கச் சமரசத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் மூலம் ஒப்பந்தம் செய்து கொள்ளும் சங்கங்களாகவே செயல்பட்டுவருவதைப் பற்றி, அவ்வப்போது ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கேற்ப தொழிலாளர்களிடம் பிரச்சாரம் செய்து அம்பலப்படுத்தினார்.

தொழிலாளர்களை வர்க்க உணர்வுடன் வளர்த்தெடுக்க வேண்டும் என்றால், முதலில் வர்க்க உணர்வுடைய சங்கம் தேவை என்று தொழிலாளர்கள் தரப்பிலிருந்து பல தோட்டத் தொழிலாளர்களும் கோரிக்கையைத் தெரிவித்தார்கள். சி.ஐ.டி.யூ. சங்கத்தை, தொழிலாளி வர்க்க உணர்வுடைய போர்க்குணமிக்க சங்கமாக மாற்றி செயல்படுத்த முடியும் என்ற நம்பிக்கைக்கு இடமேயில்லை. ஏனென்றால் கன்னியாகுமரி மாவட்டத்தோட்டத் தொழிலாளர் சங்க நிர்வாகிகளில் நடுத்தர வகுப்பினர்கள் தான் அதிகம். குட்டி முதலாளித்துவ மனப்பான்மையுடனும், அதிகாரத்துவம் உடையவர்களாகவும்,

www.tamilarangam.net

தோட்ட அதிபர்கள்/நிர்வாகிகள்/அரசு உயர் அதிகாரவர்க்கத்துடனும் மாவட்ட அளவில் கைகோர்த்து கூடிக் கூலாவும் செயல் முறைகளே காரணமாகயிருந்தது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சி.ஐ.டி.யூ. சங்கமமானது சி.பி.எம். கட்சியின் வளர்ச்சிக்காகவும், ஓட்டுவங்கிக்காகவும் பயன்படுத்தப்படுகிறதென்றும், தொழிலாளர்களின் உரிமைகள, நலன்கள், அடக்குமுறைகள் பற்றி கவலைப் படுவதில்லை என்ற உண்மை நிலைப்பாட்டையும் சி.ஐ.டி.யூ. நிர்வாகக் குறைகளையும் அம்பலப்படுத்துவதற்குரிய அளவுக்கு அங்கு தொழிற்சங்க விரோதச் செயல்கள் இருந்துள்ளது.

சி.ஐ.டி.யூ. சங்கத்தால், தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித பலனும் கிடைக்கப் போவதில்லை. பலன் பெறுபவர்கள், தோட்ட முதலாளிகளும், அரசும், சி.பி.எம். கட்சியும் தான் என்ற உண்மையை அறிந்த, முற்போக்கான வீரமிக்கத் தொழிலாளர்கள் பலர், தோழர் தாஸ் அவர்களை அணுகி தங்களுக்கு சங்கம் அமைத்து தரும்படிக் கோரினார்கள். இவர்களுடைய கோரிக்கையை சி.பி.ஐ.(எம்.–எல்) கட்சியின் குமரி மாவட்டத் தோழர்கள் பலரும் விவாதித்து, தொழிலாளர்களே சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்த வேண்டும். கட்சித் தோழர்கள் சங்கப் பொறுப்புக்குள்



குமரி மாவட்டத்தில் நடைபெற்ற ஊர்வலத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புகுந்து ஆதிக்கம் செய்யக்கூடாது. சங்கம் நடத்துவதற்குரிய அனைத்துவிதமான பயிற்சிகளையும், தொழிலாளர்களுக்கு கட்சி வெளியிலிருந்து கற்பிக்க வேண்டுமென்றும் முடிவுசெய்தது.

இதனடிப்படையில் தனியார் தோட்டத்தொழிலாளர்களும், அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களும் பங்கு பெற்று கன்னியாகுமரி டிஸ்ட்ரிக் பிளாண்டேசன் ஒர்க்கர்ஸ்–யூனியன் ஆரம்பிக்கப்பட்டது. தொழிலாளர்களே நிர்வாகிகளாக உள்ளனர். இன்று வரையிலும் கூட இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சியின் தோழர்கள் இச்சங்கத்திற்குத் தேவையான ஆலோசனைகளையும், உதவிகளையும் மட்டுமே வழங்குகின்றனர். சங்கத்தின் விவகாரத்தில் தலையிடுவதேயில்லை என்பதால் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் கம்யூனிஸ்ட் கெதர் கட்சிக்கு ஆதரவு பெருகியுள்ளது.

அரசியல் கட்சியின் தலையீடு இல்லாமல் தொழிலாளர்களே சுதந்திரமாக, தங்களது சங்கத்தை நடத்துவதால், அரசுக்கும், தோட்ட முதலாளிகளுக்கும் பெரும் சங்கடத்தை ஏற்படுத்துகின்றது. ஏனென்றால், ஏதேனும் பிரச்சினைகளில் இச் சங்கத்தையும் அழைக்க வேண்டியுள்ளது. இச்சங்கத்தின் பிரதிநிதிகள் தோட்டத் தொழிலாளர்கள். மற்ற சங்கங்களுக்கோ பிரதிநிதிகள் சட்ட மன்ற உறுப்பினர்கள், வழக்கறிஞர்கள், பட்டம் பதவி



குமரி மாவட்டத்தில் நடைபெற்ற பேரணியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடையவர்களாயிருக்கின்றனர். இவர்களுக்கு வழங்கும் மரியாதையை, தொழிலாளர்களுக்கும் வழங்கவேண்டியிருக்கிறதே என்று அதிகாரவர்க்கம் முகம் சுழிக்கின்றதையும் பார்க்க முடிகிறது.

தோட்டத் தொழிலாளர்களுக்கும், சங்க நிர்வாகிகளுக்கும் ஓரளவு மதிப்பும், மரியாதையும் கிடைக்கிறதென்றால் அது சி.பி.ஐ.(எம்.–எல்) கட்சியின் தோழர்களாகயிருந்த தோழர் லூயி தேவசகாயம் மற்றும் தோழர் தாஸ், தோழர் எஸ். குழந்தை சாமி, அபுபக்கர், இராகவன், தங்கப்பன், குட்டப்பன் பிள்ளை போன்ற பல தோழர்களின் அரும்பெரும் பணிகள் தான் காரணமாகும் என்றால் அது மிகையாகாது.

தோழர் தாஸ் அவர்களின் வர்க்க உணர்வு, போராட்ட உணர்வுடன் கூடியது. அன்றாடப் போராட்டத்தின் விளைவாக, கன்னியாகுமரி மாவட்ட ஜெனரல் லேபர் யூனியன் ஒன்று தேவை என்ற நிலைமையும் ஏற்பட்டதாக வெகு ஜனத் தொழிலாளி மக்கள் நம்மிடம் தெரிவித்தனர். இவரது ஆலோசனைப்படி கன்னியாகுமரி மாவட்ட ஜெனரல் லேபர் யூனியன் உருவாக்கப்பட்டது. இதில் சுமை தூக்கும் தொழிலாளர்கள், கயிறுதிரிப்பு, கட்டிட வேலை, மற்றும் பல வேலைகளைச் செய்யும் தொழிலாளர்கள் உறுப்பினர்களாகயிருந்து, தங்களது சங்க நடவடிக்கையைத் தாங்களே கவனித்துக் கொள்கின்றனர். இது தான் தொழிற் சங்க சுதந்திரம், கட்சியின் சுயநல ஆதிக்கமில்லாத சங்கம் என்று இப்பகுதியில் வாழும் மக்களால் பேசப்படுகின்றது. இப்படிப்பட்ட தொழிலாளர் உரிமைகளுக்கானப் பணிகளை தோழர் தாஸ் நடத்திவந்ததின் காரணமாக, உழைக்கும் மக்களின் ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளராக, 1989ல் நாகர்கோவில் பாராளுமன்றத் தொகுதியிலும், 1991ல் விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியிலும் போட்டியிட்டு, இந்திய அரசியல் செயல்முறைகளையும் அரசு அலுவலக நடவடிக்கைகள், அடக்குமுறைகள், மனித உரிமை மீறல்களையும் அம்பலப்படுத்தி வாக்காளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திட பிரச்சாரம் செய்து தேர்தலை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார்.

1993-ல் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எடேசா, தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வுக்காகப் போராட்டம் நடத்தியதற்காக, எஸ்டேட் நிர்வாகம் தோழர் தாஸ் மீதும், மற்றும் பல தொழிலாளர்கள் மீதும் பொய்ப் புகார் மனுக்கொடுத்தது. தோட்ட அதிபர்களின் கைக்கூலிக்கு இரையான காவல்துறை ஆய்வாளர் விசாரணை ஏதும் நடத்தாமல் பொய் வழக்குப் பதிவு செய்து தோழர் தாஸ் அவர்களைக் கைது செய்து, சிறையில் அடைத்தார். வெளியிலிருந்த தொழிலாளர்கள் உடனடியாக, தீவிர முயற்சிகளை மேற்கொண்டு, தோழர் தாஸ் அவர்களை பிணையில் வெளிக் கொண்டு வந்தனர். இந்த வழக்கு, குழித்துறை குற்றவியல் நடுவர் மன்றத்தில் அவரது மறைவு வரை நிலுவையில் இருந்து உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோழர் தாஸ் அவர்கள், தனது மறைவுக்காலம் வரை தன்னுடைய வாரிசுகளைப் பற்றிக் கவலைப் படவேயில்லை. கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கம் வகிப்பதால் தான் நமக்கு தொழிலாளர் மத்தியில் மதிப்பு உள்ளதென்றும், தொழிலாளர்கள் முடிந்தளவுக்கு உதவுகின்றனர் என்றும், வாரிசுகளின் படிப்பு, வேலை வாய்ப்பு போன்றவற்றுக்கு கட்சித் தோழர்கள் ஆதரவாளர்கள் உதவி செய்ததை அடிக்கடி நினைவுப் படுத்திப் பேசுவார். மேலும் நகரத்தில் சாலையோரங்களில் வாழ்கின்ற மக்களின் நிலைமைக்கு, நம்முடைய கிராமப்புற வாழ்க்கை எவ்வளவோ உயர்வானது என்றும், கஷ்டங்கள் ஏற்படும் போது நம்மைவிடவும், அதிகமான கஷ்டங்களை அனுபவிக்கும் மக்களை நினைத்துப் பார்க்க வேண்டும், கஷ்டங்களுக்கு காரணமான இச்சமூக அமைப்பை மாற்றி, சுரண்டலற்ற சமுதாயத்தை அமைக்க நாம் ஒவ்வொருவரும் தமது பங்கை வழங்க வேண்டுமென்று தான் வீட்டிலும் பேசுவார்.

தோழர் தாஸுக்கும், அவரது வாரிசுகளுக்கும், அவரது மறைவுக் காலம் வரை ஒரு செண்ட் பூமி கூட கிடையாது. மேலும் 1989-ல் தொழிலாளர் ஒற்றுமை இயக்கம் என்ற தலைப்பில், தொழிலாளர் ஒற்றுமைக்காக, தமிழ் மாத இதழைத் தொடங்கி தமிழகத்தின் பல பகுதிகளிலும் அறிமுகம் செய்தார். இவ்விதழ் மூலம் தொழிலாளர்களிடையே ஒற்றுமையை



பொது மக்கள் அஞ்சலி செலுத்துகின்றனர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வலியுறுத்தினார். மக்களாட்சி அதிகாரக் கமிட்டியின் பொறுப்பிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கெதர் கட்சியின் மத்தியக் குழுவிலும் உறுப்பினராகயிருந்து தனது அனுபவத்தைப் பயன்படுத்தி, திறமையுடன் பணியாற்றியுள்ளார்.

1980-ம் வருடத்திலிருந்து, இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சியின் பீப்பள்ஸ் வாய்ஸ் தமிழ் இதழுக்கு பொறுப்பாளராகயிருந்து, இதழ் வெளியிடவும், உழைக்கும் மக்களிடம் இதழ் சென்றடையவும், இதழில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகள் மீது விமர்சனங்கள் நடைபெறவும் திட்டமிட்டு கட்சிப் பணியாற்றியுள்ளார். தமிழகத்தின் பல பாகங்களிலும் பலதரப்பட்ட தொழிலாளர் வர்க்கத் தோழர்களை ஊக்குவித்து, அவர்களை கம்யூனிஸ்டுகளாக உருவாக்குவதில் திறமை கொண்ட தோழராக தோழர் தாஸ் விளங்கினார்.

முதலாளித்துவ சித்தாந்தக் கட்சிகளின் பிரித்தாளும் சூழ்ச்சிகளுக்கெதிராக உழைக்கும் மக்களை தினமும் சந்தித்து விவாதிப்பார். குறிப்பாக இந்திய இராணுவமே இலங்கையை விட்டு வெளியேறு என்ற கோஷம் அச்சிட்ட சுவரொட்டியை இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சி வெளியிட்டதை அறிந்த கியூ பிரிவு புலனாய்வுக்காவல் துறை இவரது வசிப்பிடத்தை சோதனை செய்து, மக்களிடையே பீதியைத் தூண்டிவிட்டது. காவல்துறையால் பல முறை அவமதிப்புக்குள்ளாக்கப்பட்ட நேரத்திலும் கூட, கம்யூனிஸ்டுகளை எவ்வளவு அதிகமாக துன்புறுத்தினாலும் லட்சியத்திலிருந்து பின் வாங்கமாட்டோம் என்று உறுதியுடன் பல முறை முழக்கமிட்டிருக்கிறார்.

அரசின் அடக்குமுறைக்கும், ஒடுக்குதலுக்கும், புலனாய்வுத் துறையின் மிரட்டல்களுக்கும் அஞ்சாத தொழிலாளி வர்க்கத்தின் போராளியாகவே தோழர் தாஸ் அவர்கள் தனது இறுதி மூச்சு உள்ளவரை செயல்பட்டார்.

1996-ம் வருடம் நவம்பர் மாதம் 5-ம் நாள், கட்சியின் கிளைக் கமிட்டிக் கூட்டத்தில் பங்கெடுத்துவிட்டு இரவுதான் வீட்டிற்குச் சென்றுள்ளார். அடுத்த நாள் காலையில் நெஞ்சு வலி ஏற்பட்டு, மருத்துவ மனைக்குச் செல்லும் வழியில் காலமானார் என்பதை துயரத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தோழர் தாஸ் அவர்களின் அரசியல் வாழ்க்கை மிகவும் தூய்மையானது. அவரது எளிமையான, கபடமில்லாத பழக்கங்களும் நம்மைவிட்டு ஒரு நாளும் மறையாது.

www.tamilarangam.net

தோழர் தாஸ் அவர்கள் தனது இறுதிக்காலம் வரை மார்க்சிச-லெனினிச தத்துவத்தில் நம்பிக்கையுடன் செயல்பட்டிருக்கிறார். அவர் விட்டுச் சென்ற வெகுஜன இயக்கப்பணி, மனித உரிமை, அரசியல் ஒற்றுமை, கம்யூனிஸ்ட் ஒற்றுமை ஆகிய கட்சிப் பணிகளை பல மடங்கு அதிகரித்து, மக்களிடம் புரட்சிகர அரசியல் உணர்வை ஏற்படுத்தி, சரண்டலற்ற சமுதாயத்தைப் படைக்க நாம் பணியாற்றுவோம். இப்பணிகளைச் செய்வதே நம்முடைய வரலாற்றுக் கடமையாகும்.



தோழர் பி.தாஸ் நினைவிடத்தில் தோழர்கள் டி.வில்சன், சிசுபாலன், அப்புக்குட்டன, ஜான்சன், ஜெயக்குமார் உட்பட மற்றும் பல தோழர்கள்.

www.tamilarangam.net

# கடிதங்கள்

## மார்க்சிச-லெனினிச வீரர் தோழர் தாஸ்

அன்புள்ள தோழர் லைசம்மாள் மற்றும் குடும்பத்தினர்களுக்கு,

நம்முடைய தோழர் தாஸ் அவர்கள், நமது கட்சியின் மத்தியக் குழுவின் உறுப்பினராகவும் தலைமைப் பொறுப்புள்ள தோழராகவும் செயல்பட்டு வந்தார். நமது தோழர் தாஸ் அவர்களின் மறைவுக்கு என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தையும் துயரத்தையும் ஏற்றுக் கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். தோழர் தாஸ் அவர்களின் மறைவு எனக்கு மிகப் பெரிய இழப்பாகும். இரண்டு மாதங்களுக்கு முன்புதான் நான் தோழர் தாஸ் அவர்களைச் சந்தித்தேன். அப்போது அவர் முழுமையான கட்சி உணர்வுகளுடன் கடினமாகப் பணியாற்றுவதைக் கண்டேன். கடந்த இருபது வருடங்களாக, கம்யூனிசத்திற்கான நமது கட்சி வேலைகளிலும், போராட்டங்களிலும் பங்கு பெற்ற தோழர் தாஸ் அவர்களுடைய மறைவுச் செய்தியை என்னால் நம்பவே இயலவில்லை.

தோழர் தாஸ் அவர்கள் மரியாதைக்குரிய கம்யூனிஸ்ட் போராளியாவார். ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்று திரட்டிட துணிச்சலுடனும், குறிக்கோள்களுடனும் வாழ்ந்தவர். இவரது வாழ்நாளில் பல வருடங்களாக நடைபெற்ற பல போராட்டங்களில் ஈடுபட்டு, தியாகம் செய்து உறுதியுடன் செயல்பட்டார். மக்கள் மத்தியில் நன்கு அறிந்த தலைவராகவும் வாழ்ந்தார். இவர் மார்க்சிச-லெனினச விஞ்ஞானத்தைக் கற்று கம்யூனிஸ்ட் என்கிற கொள்கை உறுதியுடன், சிறந்த கம்யூனிஸ்ட்டாகவே வாழ்ந்தார். உழைக்கும் வெகுஜனமக்களின் போராட்டங்களில் வெற்றி மனப்பான்மையுடனும், நம்பிக்கையுடனும் செயல்பட்டார். இவர் எப்போதும் தன்னம்பிக்கையுடன், உறுதியுடன் இருந்தார். கட்சிப் பணிகளில் இளமைத்துடிப்புடனும், உற்சாகத்துடனும் தனது வாழ்க்கையின் முடிவு வரையிலும் செயல்பட்டிருக்கிறார்.

தோழர் தாஸ் அவர்களுடைய வாழ்க்கையும், எண்ணங்களும், வேலை முறைகளும், எல்லா விதத்திலும், வெகுஜன மக்களுக்கும், தோழர்களுக்கும் எடுத்துக் காட்டும் அம்சங்களாகும். விமர்சனம்/சுய விமர்சனம் வழியாக ஒரு சம்யூனிஸ்ட் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதற்கு வழிகாட்டியாகவே வாழ்ந்து வந்தார். தோழர் தாஸ் அவர்களின் முற்போக்குச் சிந்தனைகள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒழுக்க நெறி ஆகியவற்றால் பொது மக்களிடம் மதிப்பை பெற்று நேர்மையான அரசியல்வாதி என்று உயர்த்தப்பட்டிருந்தார்.

தோழர் தாஸ் அவர்கள் நமது கட்சியைக் கட்டியமைத்து வளர்ச்சியடையச் செய்தார் கட்சியை கட்டியமைப்பதிலும், வளர்த்தெடுப்பதிலும் தோழர் தாஸ் அவர்களுடைய கட்சிப் பணிகளை எளிதில் நாம் மறக்க முடியாது.

தமிழகத்திலும், கேரளத்திலும், கட்சிப் பணிகளில் முன்னேற்றம் ஏற்பட தலைமைப் பொறுப்புகளை ஏற்று உறுதியுடன் செயல்பட்டுள்ளார். அவர், மதிப்பும், மரியாதையும் கொண்ட மக்கள் தலைவர் என்று எவ்விதமான தயக்கமுமில்லாமல் என்னால் சொல்ல முடியும். அவரை ஒரு சிறந்த கம்யூனிஸ்ட்டாகவே கண்டேன். எனக்கு அவர் மீது அளவிட முடியாத அளவுக்கு மரியாதை ஏற்பட்டது. குறிப்பாக, இளம் கம்யூனிஸ்ட்கள், மற்றும் மக்களிடம் அவருக்கு ஒரு தனிப்பட்ட அன்பும் நட்பும் இருந்தது. உங்களுடைய பகுதியில் கட்சித் தோழர்களை அணிதிரட்டி உறுதியான கட்சியமைப்பைக் கட்டியமைத்து செயல்பட்டு கட்சிக்கு பேருதவியாக முன்னணியில் நின்று செயல்பட்டார்.

நமது தோழர் தாஸ் அவர்கள் விட்டுச் சென்றிருக்கிற வேலைகளை சந்தேகத்திற்கு இடமில்லாமல் முனைப்புடன் செயல்படுத்துவோம்.

அன்பார்ந்த தோழர்களே, நமது கட்சி முழுமைக்கும் பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. உங்களுடைய அன்புக்குரிய கணவரும் மற்றும் தந்தையுமான தோழர் தாஸ் அவர்களுடைய மறைவுகாரணமாக நீங்களும் துயரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். நானும், நம்முடைய எல்லாத் தோழர்களும் உங்களுடன் இருந்து, உங்களுடைய ஆழ்ந்த துக்கத்திலும்/துயரத்திலும் பங்கெடுத்துள்ளோம்.

நாம் நமது துயரத்திலிருந்து விடுபட்டு, நம்முடைய தோழர் தாஸ் அவர்களின் நினைவாக, அவர் நமக்கெல்லாம் விட்டு சென்றிருக்கிற உறுதியான வேலைகளுடன் அவரது எண்ணங்களை நிறைவு செய்கின்ற விதத்தில் இந்தியாவிலுள்ள உழைக்கும் மக்கள் மற்றும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக பணிபுரிந்து, இந்தியாவில் வெற்றியை நாம் நிலைநாட்டுவோம். இதுவே தோழர் தாஸ் அவர்களுக்கு நாம் நிறைவேற்றும் வரலாற்றுக் கடமையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நமது எல்லோருடைய இதயங்களிலும் எப்பொழுதும் அவர் இடம் பெற்றிருப்பார். என்னுடைய தனிப்பட்ட ஆழ்ந்த மரியாதையையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோழர் தாஸ் அவர்களுக்கு செவ்வணக்கம்!

லால்சிங்
பொது செயலாளர்
இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சி

## புரட்சியாளர் தாஸ்

தாஸ் எனும் தோழரை முதன் முதலாக நான் அறிந்தது சிறையில் தான். 1972-ல் நானும் லெனின், குரு, புலவர் கலியபெருமாள் ஆகிய தோழர்களும் திருச்சி மத்திய சிறையின் பழைய கண்டத்தில் தூக்குத் தண்டனைக் கைதிகளாக அடைப்பட்டிருந்தோம்.

நெய்வேலியில் காவல் துறை அதிகாரி ஒருவரைத் தாக்கியது தொடர்பான வழக்கில் சிவதாஸ், சந்திரசேகர், ராஜ்மோகன், பெரியவர் சண்முகம், அரிதாஸ், பூபாலன் முதலான தோழர்கள் சிறையின் வேறொரு பகுதியில் அடைப்பட்டிருந்தார்கள், வள்ளுவன், கணேசன் ஆகியோரும் ஆயுள் தண்டணைக் கைதிகளாக அவர்களுடன் இருந்தார்கள்.

அப்போது ஒரு நாள் செய்தி கிடைத்தது – 'நக்சலைட்' புது வரவு! கன்னியாகுமரியிலிருந்து ஆறேழு பேர் வருட தண்டனை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள்!

ஒரே சிறைக்குள் தான் என்றாலும் நாங்கள் உடனே அவர்களைப் பார்த்துப் பேசும் வாய்ப்பில்லை. சிறைக்குள்ளேயே எங்களுக்கும் அவர்களுக்கும் தனித் தனிச் சிறைகள். சிறை மருத்துவ மனைக்கு வருகிற சாக்கில்தான் அவர்கள் எங்களைப் பார்க்கவும், தொலைவில் இருந்தபடி எங்களோடு இரண்டொரு வார்த்தை பேசவும் முடிந்தது.

'மாஸ்டர்' என்றழைக்கப்பட்ட லூயிஸ் தேவசகாயம், கிருஷ்ணப்பிள்ளை, தாஸ், குட்டப்பன், வாமதேவன், செல்லப்பன், இவர்களை மொத்தமாக 'கன்னியாகுமரித் தோழர்கள்' என்று குறிப்பிடுவோம்.

www.tamilarangam.net

நெருங்கிப் பேசிப் பழகும் வாய்ப்பின்றிப் போனாலும் எங்களுக்குள் நெருக்கமான தோழமை இருந்தது. அதிலும் போராட்டத் தோழமை!

ஆம். சிறைக்குள் ஓயாத போராட்டங்கள்! உண்ணாவிரதம், கொட்டடிக்குள் செல்ல மறுத்தல், எந்த அதிகாரியாவது அவமதிக்கத் துணிந்தால் அங்கேயே அப்போதே பதிலடி கொடுத்தல்... இப்படி எத்தனையோ வடிவங்களில் தினம் தினம் போராடிக் கொண்டிருந்தோம்.

சட்டப்படி உரிமையானவற்றைப் பெறுவதற்காக மட்டுமல்ல, அரசியல் கைதிகள், போராளிகள் என்ற முறையில் எங்கள் தன்மானத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவும் போராட வேண்டியிருந்தது.

அந்தப் போராட்டங்களின் விளைவாகத்தான்... இன்றளவும் தமிழகச் சிறைகளில் 'நக்சலைட்' கைதி என்றால் தனி மரியாதை உண்டு. தாஸூம் ஏனைய தோழர்களும் குருதி சிந்தி ஈட்டிய மரியாதை அது!

ஆம். குருதி சிந்தித்தான்! சிறை மண் போர்க்களமாக மாறிய அந்த நிகழ்ச்சியில் தாஸ் வகித்த பங்கை மறக்க முடியாது.

1972 அக்டோபர் 20-நானும் குருவும் பழைய கண்டத்தில் நடத்திக் கொண்டிருந்த காலவரையற்ற பட்டினிப் போராட்டத்தின் ஒன்பதாவது நாள். புலவர் எங்களோடு இருந்தார். தோழர் லெனின் மஞ்சள் காமாலை நோயுற்று சிறை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தார். தாஸூம் ஏனைய தோழர்களும் சி.பி. கண்டத்தில் இருந்தார்கள்.

அப்போதெல்லாம் நாங்கள் நீதிமன்றங்களில் வழக்காடுவதில்லை. நீதிமன்றப் புறக்கணிப்புதான். அதற்கும் மேலே, நீதிமன்றத்துள்ளேயே முழக்கம் எழுப்புவது, குற்றவாளிக் கூண்டில் நின்று கருத்துப் பரப்புவது என்று செயல்பட்டிருந்தோம். தண்டனை எதுவானாலும் எதிர்த்து மேல்முறையீடு செய்வதில்லை.

நானும் குருவும், லெனினும் எங்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்யாத போதிலும், சென்னை உயர்நீதி மன்றம் எங்கள் வழக்கைப் பார்வையிலெடுத்து அமர்வு நீதிமன்றத் தீர்ப்பை உறுதி செய்தது. ஆனால், மரண தண்டனைக்கு அஞ்சி நாங்கள் மேல்முறையீடு செய்தது போல் எல்லா முக்கிய நாளேடுகளும் செய்தி வெளியிட்டன-எல்லாம் காவல் துறை 'கியூ' பிரிவின் உபயம்!

www.tamilarangam.net

இதை எதிர்த்துத்தான் நானும் குருவும் உண்ணாவிரதம் தொடங்கியிருந்தோம். ஒன்பது நாட்களாகியும் சிறை அதிகாரிகள் எங்கள் கோரிக்கையை ஏற்க முன்வராததால் அன்றைய தினம் ஒரு புதிய போராட்ட உத்தியை கைக்கொண்டோம், சி.பி. கண்டத்திலிருந்த தோழர்கள் வழக்கம்போல் அன்று காலையும் சிறை மருத்துவமனைக்குப் புறப்பட்டார்கள். தோழர் சிவதாஸ் சொன்னார், "நோய் பார்ப்பதற்காக இன்று யாரும் வர வேண்டாம், அடி கொடுக்கவும், அடி வாங்கவும் தயாரானவர்கள், சக்தியுள்ளவர்கள் யாரோ அவர்கள் மட்டும் வாருங்கள்".

எட்டு தோழர்கள் புறப்பட்டார்கள் தாஸ், கிருஷ்ணப்பிள்ளை, செல்லப்பன், குட்டப்பன், வள்ளுவன், சிவதாஸ், சந்திரசேகர், ராஜ்மோகன்!

அவர்கள் சிறை மருத்துவமனையில் லெனினைப் பார்த்து முடித்துவிட்டு, கட்டுக்காவலை எல்லாம் மீறி பழைய கண்டத்துக்குள் நுழைந்து விட்டார்கள். பிறகு நாங்கள் பதினொரு பேரும் வராந்தாவில் உட்கார்ந்து விட்டோம். எங்கள் மூவரையும் கொட்டடிகளில் அடைத்துப் பூட்டவும் அவர்கள் எண்மரையும் திருப்பி அனுப்பவும் சிறை அதிகாரிகளும், காவலர்களும் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. கெஞ்சல், மிரட்டல் எதுவும் எடுபடவில்லை. நாங்கள் உறுதியாக இருந்தோம்.

"எங்களை மிரட்டிப் பணிய வைக்க முடியாது. நாங்கள் எவ்வித வன்முறையிலும் ஈடுபடவில்லை. அமைதியாகப் போராடும் எங்கள் மீது நீங்கள் வன்முறையை ஏவினால் நாங்கள் அதை சந்திக்கத் தயார்."

அதிகாரிகள் அடுத்த நடவடிக்கைக்கு ஆயத்தமானார்கள். தாக்கினால் திருப்பித் தாக்க நாங்களும் தயார்படுத்திக் கொண்டோம்-மனத்தளவில். ஆயுதமேந்தித் தாக்க வரும் பெரும் படையை வெறுங்கையோடு வெறும் 11 பேர் எதிர்த்து நிற்பது பற்றி நாங்கள் அச்சப்படவோ கவலைப்படவோ இல்லை. சிறைக்குள்ளும் ஆயுதப் போராட்டம் நடத்தும் நேரம் வந்து விட்டதென்று உற்சாகமாய் இருந்தோம்.

இணைக் கண்காணிப்பாளர் தலைமையில் ஒரு பெரும் படை எங்களை நோக்கி வந்த போது முழக்கங்களால் எதிர் கொண்டோம். காவலர்களும் தண்டனைக் காவலர்களுமாக நூற்றுக்கு மேற்பட்டோர் தடியேந்தி வந்தனர். பழைய கண்டத்தின் வராந்தாவுக்கு இரும்பு வலைத் தட்டி போடப்பட்டிருந்தது. தட்டிக்கு மேல் மரச்சட்டங்கள்! பகைவன் பழைய கண்டத்து அடைப்புக்குள் நுழைந்தவுடன் நாங்கள் இரு அணிகளாகப் பிரிந்து வராந்தாவின் இரு வாயில்களிலும் நின்று முழக்கமிட்டோம்.

www.tamilarangam.net

"தலைவர் மாவோ வாழ்க!"
"புரட்சி ஓங்குக!"
"ஆயுதப் போராட்டம் வெல்க!"
"அடித்தால் ... திருப்பி அடிப்போம்!"

வலைத் தட்டியில் இரு வாயில்கள். ஒவ்வொரு வாயிலுக்கும் இரட்டைக் கதவு. நாங்கள் அந்தக் கதவுகளைச் சாத்திப் பிடித்துக் கொண்டோம். இணைக் கண்காணிப்பாளர் கத்தினார்.

"போய் அவர்களைப் பிடித்து இழுத்து வாருங்கள்!"

எதிர்ப்படை கதவுகளைத் தள்ளித் திறக்க முயன்றது. நாங்கள் அந்த முயற்சியை முறியடித்தோம். அவர்கள் தடி கொண்டு வலைத் தட்டியைக் குத்தி உடைக்க முயன்றனர். மரச் சட்டங்களைப் பெயர்க்கவும் முயன்றனர்.

அடிமேல் அடி விழுந்து சில இடங்களில் உடைப்பு ஏற்பட்டபோது, உட்புறமாகப் பெயர்ந்த சட்டங்கள் எங்கள் கையில் ஆயுதங்களாயின. காலை உணவுக்காகக் கொண்டு வரப்பட்டிருந்த 'சுடு கஞ்சி' கூட எங்களுக்கு ஓர் ஆயுதமாயிற்று.

தோழர் தாஸ் அந்தப் போர்க்களத்தில் கையில் ஒரு தடியோடு நின்றதும், உடைப்புகள் வழியே எதிரியைத் தாக்கியதும், இடையிடையே அந்தக் கன்னியாகுமரித் தமிழில் குரல் கொடுத்து எதிரியை மிரள வைத்ததும் எல்லாம் நேற்று நடந்தாற்போல், நினைவுத் திரையில் நிலைத்துள்ளன.

'போர்' கிட்டடத்தட்ட ஒரு மணி நேரம் நீடித்தது. இடையிடையே கதவுகள் திறந்து கொள்வதும், உள்ளே நுழைய முற்படுகிறவர்களை நாங்கள் மிரட்டுவதும் முடிந்தால் தாக்குவதும் அவர்கள் பின்வாங்குவதும் நாங்கள் மறுபடியும் கதவுகளை மூடிக் கொள்வதுமாக இருந்தது.

எங்கள் எதிர்ப்பை முறியடிக்க அவர்கள் மிளகாய்த் தண்ணீரை வாரியிறைத்தார்கள். அதுவும் பலிக்கவில்லை என்றதும் கொதிக்கும் வெந்நீரில் மிளகாய்த் தூளைக் கரைத்து வாரியடித்தார்கள். எங்கள் கோட்டை வீழ்ந்தது.

இரு பக்கமும் தட்டிக் கதவுகள் திறந்து கொண்டன, திமுதிமுவென உள்ளே புகுந்து கண்மூடித்தனமாகத் தடியால் அடித்தார்கள். அடிபட்டு வீழ்ந்தவர்களைத் தரதரவென இழுத்துச் சென்று மைதானத்தில் வரிசையாகக் கிடத்தினார்கள். உடம்பில் உடை சிலருக்கு இருந்தது, சிலருக்கு இல்லை.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கையில் தடி, மரச்சட்டம் போன்ற ஆயுதம் வைத்திருந்த தோழர்கள் இன்னமும் போராடிக் கொண்டிருந்தார்கள். மறைவாக மூலையில் நின்று கொண்டு, பகைவனுக்கு சவால் விட்டார்கள்,

"உள்ளே நுழைந்து பார்"

அந்த நால்வரில் தோழர் தாஸும் ஒருவர். முடிவில் மிளகாய் வெந்நீர்தான் அவர்களை வெளியே கொண்டு வந்தது. அவர்கள் அடித்து வீழ்த்தப்பட்டு உணர்விழந்தார்கள். அவர்களைக் கம்பளிப் போர்வையிலும், சாக்கிலும் சுற்றிப்போட்டு, காவலர்களும் தண்டனைக் காவலர்களும் இருபுறமும் நின்று தடிகளாலும் இரும்புக் குழாய்களாலும் கழுத்திலிருந்து கால்பாதம் வரை அடித்து நொறுக்கினார்கள்.

களத்தில் நாங்கள் அடிபட்டுக் கிடந்தோம். மூவரைத் தவிர மற்றவர்கள் நினைவிழந்து கிடந்தார்கள். யாரேனும் செத்திருக்கலாமோ என்ற எண்ணம் கூட வந்து போயிற்று. குறிப்பாக, தாஸ், கிருஷ்ணப்பிள்ளை!

தாஸ் குருதிச் சேற்றில் கிடந்தார் என்றால் மிகையன்று. அவரது உடலில் செங்குருதி பூக்காத இடமில்லை.

கொடுங்காயங்களால் ஏற்பட்ட பெரும் குருதிச் சேதத்திலிருந்து தாஸ் உயிர் பிழைத்ததை மருத்துவ அறிவியலின் அருஞ்சாதனை என்றுதான் சொல்ல வேண்டும்.

எங்களுக்கு மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்ட பின் சில மாதங்கள் தாஸுடனும் மற்ற தோழர்களுடனும் வைக்கப்பட்டோம். அப்போது நானும் தோழர் லெனினும் 'மார்க்சிஸ-லெனினிஸ' கட்சியின் அடிப்படை வரையறைகளில் மாறுபட்டு மற்றவர்களுடன் கூர்மையாக விவாதித்துக் கொண்டிருந்தோம். இதனால் சில தோழர்கள் எங்கள் மீது கசப்புக் கொண்டிருந்தார்கள் என்பதும் உண்மை. அந்த நிலையிலும் தோழமை குன்றாமல் எங்களுடன் பழகிக் கொண்டிருந்த ஒரு சிலரில் தோழர் தாஸும் ஒருவர்.

சிறைமாற்றம் எங்களைப் பிரித்துவிட்ட பின் தொடர்பே இல்லாமற் போயிற்று. தோழர் தாஸும் மற்றவர்களும் எப்போது விடுதலையானார்கள் என்று கூட நாங்கள் அறியோம். 1985-இல் நாங்கள் விடுதலை செய்யப்பட்டோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுமார் ஈராண்டு முன்பு (1994 அல்லது 1995) ஒரு நாள் காலை பெரியவர் ஒருவர் இளைஞர் ஒருவரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு என் இல்லம் தேடி வந்தார். உண்மையில் எனக்கு அடையாளம் தெரியவில்லை. யார்?

தாஸ்! அட, நம்ம தாஸ்! இளைஞர் தாஸுக்கு இத்தனை வயதாகி விட்டதா? நம்புவது கடினம்! அன்புடன் அளவளாவி மகிழ்ந்தோம்.

என்னைப் போலவே அவரும் 'இடது' தீவிரவாத, சாகவாதப் பாதையைக் கைவிட்டு, வெகுமக்கள் போராட்டப் பாதையைக் கைக்கொண்டிருந்தார். அந்த அளவில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

பிறகு எனக்குக் கடிதம் எழுதினார். அவர் சார்ந்த கம்யூனிஸ்டு கெதர் கட்சியின் ஏடுகள், வெளியீடுகள் அனுப்பினார். அவரோடு கொஞ்சம் அரசியல் விவாதம் செய்ய வேண்டும் என்று எண்ணியிருந்தேன். அதற்குள், இயற்கை அவரை பறித்துக்கொண்டது.

இந்திய புரட்சி இயக்க வரலாற்றில் இதற்கு முன்னும் 'தாஸ்' என்ற பெயர் உண்டு-ஜத்தீன் தாஸ்! பகத் சிங்கின் தோழர்! சிறையில் பட்டினிப் போராட்டம் நடத்தி உயிர்த் தியாகம் செய்தவர் ஜத்தீன் தாஸ்!

அந்த தாஸ், நம் தாஸ்-இவர்கள் புரட்சிதாசர்கள்! அவர்களின் புரட்சிப் பதாகை வீழாது, தாழாது காக்க உறுதி ஏற்போம்.

தியாகு
சென்னை

## சமூகத் தொண்டுக்கு முதலிடம்

அன்புடைய தோழர்களே!

தோழர் தாஸ் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்தோம். உலகத்தில் எத்தனையோ மனிதர்கள் தோன்றுகிறார்கள், மறைகிறார்கள். அவர்களில் மறக்க முடியாத மாமனிதர்கள் சிலர்-அவர்களில் தோழர் தாஸும் ஒருவர் என்பது மறுக்க முடியாத உண்மை-அவரது பொதுத் தொண்டை-புரட்சிக்கான மகத்தான பணியை-எவராலும் மறக்கவும் முடியாது. காரணம், அவர் தனக்கென வாழாமல் சமூக மாற்றத்திற்காக தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்டது. கம்யூனிச சமுதாயம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படைக்க வேண்டும் என்பதற்காக மார்க்சிய-லெனினிய அடிப்படையில் தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டு சமூகத் தொண்டுக்கு முதலிடமும் தனது சொந்த வாழ்வுக்கு இரண்டாம் இடமும் கொடுத்தார். அவர் வர்க்க எதிரிகளிடம் எவ்வித சமரசமும் இன்றி சித்தாந்த அடிப்படையை உறுதியாகவும்-தெளிவாகவும் பின்பற்றி எதிரிகளிடம் போராடி வந்தார். தோழர்களை வென்றடுக்கும் பணியில் மிகவும் பொறுமையாகவும் பொறுப்பாகவும் இருந்தார். தோழர்களிடம் காணும் தவறுகளை மிகவும் கனிவாக எடுத்துக் கூறி மார்க்சிய பாதையில் வழி நடத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிரிகளின் ஆத்திரமூட்டலுக்கு பலியாகாமலும் கொள்கை அடிப்படையிலிருந்து சிறிதும் தடம் புரளாமலும் சாமர்த்தியமாகவும் அமைப்பைக் கட்டினார்.

பாட்டாளி வர்க்கத் தன்மையின் அடிப்படையில் எளிமையாகவும் வாழ்ந்தார்-ஏழ்மையைக் கண்டு சிறிதும் மனங்கலங்காமல் தைரியமாக வாழ்ந்தார். மற்ற தோழர்களுக்கும் அவ்வாறு வாழக் கற்றுக் கொடுத்தார். பொதுப் பணிகளுக்குச் செல்லும்பொழுது தொழிலாளர்களின் மத்தியில் இருந்து என்ன உணவு கிடைக்கிறதோ அதை மட்டுமே உண்டு வந்தார்.

ஒரு நாள் நானும் இன்னும் சில தோழர்களும் தோழர் தாஸுடன் ஒரு பொதுக்கூட்டத்திற்கு சென்று திரும்பி வருகையில் சற்று நேரம் கூடிவிட்டது. அன்று எங்களுக்கு எங்கும் உணவு கிடைக்கவில்லை. அப்பொழுது தலைக்கு ஒரு வாழைப்பழம் மட்டுமே கிடைத்தது. அப்பொழுது, அவர் தோழர்களிடத்தில் மிகவும் கனிவாக, "தோழர்களே புரட்சிப் பணி என்பது பூ மெத்தை விரித்த மென்மையான பாதை அல்ல, அதில் பல இன்னல்களும் துயரங்களும் இருக்கும் என்பதை தெரிந்து கொண்டுதான் வந்துள்ளோம் எதையும் தாங்கிக்கொள்ளும் தியாக உள்ளத்துடன் செயலாற்ற வேண்டும். இன்றைக்கு நமக்கு ஒரு பழமாவது கிடைத்துள்ளது. சில வேலைகளில் இதுவும் கூட கிடைக்காது - ஆகவே தோழர்கள் எப்பொழுதும் எந்தச் சூழ்நிலையிலும் தைரியமாகவும் தெளிவாகவும் பணியாற்றும் மனபக்குவத்தை பெற வேண்டும்" எனத் தெளிவாகக் கூறி எங்களுக்கு நெஞ்சுரமேற்றினார். இப்படி பல நிகழ்ச்சிகள் உள்ளன.

அதே போன்று கட்சிப் பணியாற்றும் பொழுது தோழரின் வயதைக் காட்டி யாராவது, இவர் ஓய்வெடுக்கட்டும் எல்லா வேலைகளையும் நாமே பார்த்துக் கொள்ளலாம் எனக் கூறினால் - "தோழர்களே! எனக்கு வயது வேண்டுமானால் உங்களைக் காட்டிலும் கூடுதல் தான் - அதற்காக-நீங்கள் என்ன பணி செய்கிறீர்களோ அதைவிடக் கூடுதலாகச் செய்வேன்" என்று சிரித்துக் கொண்டே கூறுவதுடன் எல்லோருக்கும் இணையாக

www.tamilarangam.net

வேலையும் செய்யும் உளத்திறன் பெற்றவர். இதை பல முறை நான் நேரில் பார்த்துள்ளேன்.

இவரது பணி கன்னியாகுமரி மட்டுமில்லாமல் கரூர் வரை வந்து பணியாற்றியுள்ளார். தொழிலாளர் ஒற்றுமை இயக்கப் பணிகளுக்காக கரூர்-வெங்கமேடு-வடிவேல் நகர்-செங்குன்றம் போன்ற பகுதிகளில் எங்களோடு இணைந்து பணியாற்றியுள்ளார். அவ்வாறு பணியாற்றும் பொழுது ஒவ்வொரு தோழரிடம் இருக்கும் சிறப்புத்தன்மைகளை எடுத்துக் கூறத் தவறமாட்டார். அடுத்த வேலையில் அவர்களிடம் காணும் குறைகளைகளையும் பொழுதும் மிகவும் கவனமாக வார்த்தைகளைப் பயன்படுத்துவார். எந்த வகையிலும் அமைப்பின் வளர்ச்சிக்கு பாதகம் இல்லாத வகையில் அவரது செயல்பாடுகள் காணப்பட்டது.

எங்களுக்கெல்லாம் திட்டமிட்டபடி குறித்த நேரத்தில் எடுத்த திட்டப்படி பணியாற்றும் செயலாற்றலையும் கட்டுப்பாடுகளையும் கற்றுக் கொடுத்த பெருமை தோழர் தாஸையே சேரும் என்பதை இந்த நேரத்தில் நினைவு கூறுகிறேன். இப்படிப்பட்ட தோழர் தாஸின் மறைவுச் செய்தி வந்தபொழுது நான் ஊரில் இல்லாத காரணத்தால் இக்கடிதத்தை மிகவும் காலம் தாழ்த்தி எழுதுகிறேன். இச்செய்தியை பால் குளிர்வு நிலையத் தொழிலாளர்கள், நெசவுத்தொழிலாளர்கள் பலரும் கேட்டு தங்களது வருத்தத்தை தெரிவித்தனர். இந்த வேளையில் நானும் எனது குடும்பத்தினரும் சக தொழிலாளர்களும் தோழரின் மறைவுக்கு எங்களது ஆழ்ந்த வருத்தத்தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம், தோழர் தாஸ் அவர்களுக்கு எங்களது செவ்வணக்கம்.

இப்படிக்கு<br>
தோழமையுடன்<br>
இரா. அருண்குமார்<br>
கரூர்

## சபதம் எடுப்போம்

தோழமை மிக்க இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சிக்கும், மற்றும் முற்போக்கு மாதர் சங்கம், அனைத்துக்கும் மேலாக பாட்டாளி வர்க்கத் தோழர்கள் அனைவருக்கும் மார்க்சிய சிந்தனைக் கூடத்தின் தோழமை மிக்க வணக்கங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நமது தோழர் தாஸ் அவர்களின் மறைவு குறித்து செய்தி அறிந்ததும், மார்க்சிய சிந்தனைக் கூடத்திற்கு பெரிதும் வழிகாட்டியாகவும் சிறந்த தத்துவார்த்த தோழர் ஒருவரை நாம் இழந்து விட்டோமே என்ற அதிர்ச்சிக்கும், அடங்காத துயரத்திற்கும் ஆளானோம் என்பது வெறும் வார்த்தை ஜாலம் அல்ல என்பதை தோழமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அதைத் தொடர்ந்த தோழரின் நினைவு நாள் நிகழ்ச்சியில் பங்கு கொள்ள முடியாத சோக நிலையையும் நினைக்கும் போது, மேலும் மார்க்சிய சிந்தனைக் கூடத்திற்கு பெரும் இழப்பாகவே ஆகிவிட்டது என்று வருத்தம் அடைந்தோம்.

தோழர் தாஸ் அவர்களின் மறைவு, நமது தோழர்கள் அனைவருக்கும் ஒரு பெரிய மார்க்சிய இழப்பாகவே மார்க்சிய சிந்தனைக் கூடம் கருதுகிறது. இந்த இழப்புக்கு பெரிய காரணம் உண்டு.

மார்க்சிய சிந்தனைக் கூடத்தின் கடந்த கால நிகழ்ச்சிகளில் இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சித் தோழர்களின் வழிகாட்டுதல்களும், ஆதரவும், ஆலோசனைகளும் குறிப்பாக தோழர் தாஸ் போன்ற மார்க்சிய ஆசான் அவர்களின் பங்கெடுப்பு நிகழ்ச்சியும் விமர்சனம்-சுய விமர்சனம் அடிப்படையில் மார்க்சிய பாதையை மார்க்சிய சிந்தனைக் கூடத்திற்கும் சர்வதேச பாட்டாளி வர்க்கத்திற்கும் அளித்த பெருமையை மார்க்சிய சிந்தனைக் கூடமும் அனைத்து பாட்டாளி வர்க்க தோழர்களும் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

அதைத் தொடர்ந்த தோழர் அவர்களின் தெளிவான மார்க்சிய பாதையை மார்க்சிய சிந்தனைக் கூடத்தின் மூலமாக தேசிய, சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்திற்கும், கம்யூனிஸ்ட்களுக்கும் தொடர்ந்து பங்கு கொள்ள் பல சிறந்த நடைமுறை திட்டங்களை தொகுத்து செயலாற்ற மத்திய கமிட்டிக்கும் கட்சி மையத்திற்கும் மார்க்சிய சிந்தனைக் கூடத்திற்கும் ஓர் மார்க்சிய பாலமாக நின்று செயலாற்றிய தோழரின் மறைவு என்பது ஓர் பெரிய இழப்பாகவும், வளர்ச்சித் தடையாகவும் கருதி வருத்த மடைந்த நிலையாகும்.

தோழர் தாஸ் அவர்களின் நினைவு மடலுக்கு மார்க்சிய சிந்தனைக் கூடத்தின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் சிறிய அறிக்கையாக தருமாறு சி.ஜி.பி.ஐ. சென்னைத்தோழர்களின் கவனத்திற்காக இந்த சுருக்கமான அறிக்கையை மார்க்சிய சிந்தனைக் கூடத்தின் சார்பாக அளிக்கிறோம்.

மார்க்சிய சிந்தனைக் கூடத்தை பொறுத்தவரை கடந்த 10 ஆண்டுகால மார்க்சிய சிந்தனைக் கூடத்தின் தொடர் நிகழ்ச்சியின் மூலம் தேசிய

www.tamilarangam.net

அளவிலான மார்க்சிய தோழர்களின் தத்துவார்த்த கருத்துக்களையும், நடைமுறையில் மார்க்சியம் குன்றாத பாதைகளையும் விளக்கிய அனைத்து தோழர்களைக் காட்டிலும் சிறந்து விளங்கிய வரும், சிறந்த மார்க்சிய வழிகாட்டி என்பதையும் பெருமையாக உணர்ந்தோம்.

காரணம், தோழர் அவர்கள் ஒரு சாதாரண ரப்பர் தோட்டத் தொழிலாளியாக ஆரம்பித்து, பின்னர் தனது தெளிவான மார்க்சிய பாதையின் காரணமாகவும், புரட்சிகரமான நடைமுறை செயல் திட்டங்களாலும், குறிப்பாக தன் நலம், குடும்ப நலம் அனைத்தையும் பின்னுக்குத் தள்ளி பாட்டாளி வர்க்க நலனையே முன்னால் வைத்து உழைத்த உழைப்பாலே உயர்ந்தவர் ஆவார். மார்க்சிய சிந்தனைக் கூடம் அருகில் இருந்து உணர முடியாத நிலையை கடந்த ஆண்டுக்கு முன்னால் நடந்த சென்னை கருத்தரங்கத்தின் இரண்டு நாள் நிகழ்ச்சியின் மூலம் தோழர் தாஸ் அவர்களின் மார்க்சிய பாதையை முழுவதும் உணர்ந்தோம். தொடர்ந்து அவர் காட்டும் மார்க்சிய பாதையை கொண்டு செயலாற்ற எண்ணி இருந்த சமயத்தில் இப்படிப்பட்ட பெரிய இழப்பை அடைந்தோம்.

மார்க்சிய சிந்தனைக் கூடத்தைப் பொறுத்தவரை, தாஸ் அவர்களின் ஆற்றலையும் கருத்துக்களையும் எடுத்துரைக்க ஓர் புத்தகமே எழுத வேண்டிவரும்.

எனவே அவர் நினைவுக்கும், நிறைவுக்கும், அவர் விட்டுச் சென்ற தத்துவார்த்த மார்க்சிய நெறிமுறைகளையும், புரட்சிகர மார்க்சிய நடைமுறைகளையும், சுயநலமின்றி நடைமுறைபடுத்த சபதம் எடுப்போம்.

நமது நிலை மூன்று.

1. உலக கம்யூனிஸ்ட் இயக்கம் தேவை.

2. தேசிய கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்து ஒரே அமைப்பாக அமைத்தல்.

3. புரட்சிகர, மார்க்சிய பாதையை நடைமுறையாக கொண்ட புதிய புரட்சிகர மார்க்சிய கம்யூனிஸ்ட் இயக்கம் தேவை.

இதுவே மார்க்சிய கூடத்தின் கோரிக்கை.

இப்படிக்கு
பொதுச்செயலாளர்
மார்க்சிய சிந்தனைக்கூடம்
சென்னை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## "ஒரு தாஸ் போனால் ஒன்பது தாஸ்கள் பிறப்பார்கள்"

எனது கணவர் தோழர் தாஸ் அவர்களைப்பற்றிய நினைவுக் குறிப்பு: அவர் 18.11.1929-ல் அருமனைக்குப் பக்கமுள்ள இரும்பிலி தேசம் புதுவல் என்ற ஊரில் பிறந்தார். சிறுவயதிலேயே பெற்றோரையிழந்து சொந்தமாக குடியிருப்பு வீடு இல்லாதநிலையில் குடும்பப் பொறுப்பையும் ஏற்கும் நிலையுடன் கன்னியாகுமரி மாவட்டம் ஆலஞ்சோலைக்குப் பக்கத்தில் சக்கரபாணி எஸ்டேட்டில் காலனிக் கட்டிடத்தில் தன் சகோதரர்கள் மூவருடன் குடிபுகுந்தார். நான்கு பேருக்கும் படிப்புக்குக் கூட வசதியில்லாமல் கூலி வேலை செய்து குடும்பம் நடத்தி வந்தார். சிறுவயதிலிருந்தே லூயி தேவசகாயம் உட்பட பல அரசியல் தலைவர்களுடனும் கலந்து கொள்வதும் தொழிலாளர் பிரச்சனைகள் பற்றிய போராட்டங்கள் நடத்துவதும், அவருக்கு விருப்பமான செயலாகும்.

1955 காலகட்டத்தில் என்னுடைய அம்மா, அப்பா இறந்து நாங்கள் ஐந்து பேர் தனிமையாக அருமனை குந்நுவினை வீட்டில் கூலி வேலை செய்து வாழ்ந்து கொண்டிருந்தோம். 1958–ல் அருமனை பஞ்சாயத்து தலைவராயிருந்தவர் பொன்னுபிள்ளை என்பவர். அவர் இரக்க குணம் படைத்தவர். எங்கள் குடும்பத்துக்கும் ஒருதலைவரை நியமிக்க வேண்டும் என்று தீர்மானித்தார். எஸ்டேட்டில் தங்கியிருந்த தாஸ் அவர்களை அழைத்துக் கொண்டுவந்து எங்கள் வீட்டிலிருந்து கொண்டு பஞ்சாயத்துத் தலைவர், தோழர் தாஸ் அவர்களிடம், "தாஸ், நான் உன்னிடம் சில விஷயங்கள் சொல்லுவேன். உனக்கு விருப்பம் என்றால் ஏற்றுக்கொள்" என்றார். தோழர் சரி என்று சொன்னார். இந்த வீட்டில் ஐந்து பிள்ளைகள். இவர்களுக்கும் உன்னைப் போல் தாய், தந்தையர் இறந்து போனார்கள். ஆகையால் இந்த நான்கு பெண்/ஆண் ஆகிய ஐந்து பிள்ளைகளை காப்பாற்றும் பொறுப்பு உனக்கு. ஒரு பெண்ணை திருமணம் செய்து நீ இங்கேயே தங்க வேண்டும், வரதட்சனை இல்லை" என்றும் சொன்னார். "சரி" என்று தோழர் தாஸ் அவர்கள் ஒத்துக்கொண்டதன் பேரில் என்னுடைய தாய் மாமா அவர்களின் சம்மதத்துடனும், பொதுமக்களின் உதவியுடனும், 1958-ம் ஆண்டு அருமனை பாக்கியபுரம் ஆர்.சி. தேவாலயத்தில் வைத்து-பாதிரியாரின் அனைத்து உதவிகளுடனும் மிக எளிமையான முறையில் திருமணம் நடந்தது. பிறகு பல வருடங்கள் எனது கணவர் குடும்பமும், என் குடும்பமும் ஒன்றாக வாழ்ந்து எல்லோருக்கும் எளிய முறையில் திருமணமும் நடத்தி இதனுள் உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக பல போராட்டங்களிலும் ஈடுபட்டு பல தடவை ஜெயிலுக்கும் சென்றுள்ளார்.

மரீனா எஸ்டேட், காந்திமதி எஸ்டேட், மாருதி எஸ்டேட், வேறு பல இடங்களிலும் கூலி வேலை செய்துள்ளார். 1970-ல் எனது கணவர் கைது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்யப்பட்டு சி.ஐ.டி. போலீஸாரால் கைது செய்யப்பட்டு அருமனை காவல் நிலையத்தில் வைக்கப்பட்டு இருகைகளிலும் விலங்கு மாட்டி நாகர்கோவில் ஜெயிலுக்கு கொண்டு செல்லும் போது ரோட்டில் பெருவாரியான மக்கள் கூடிவிட்டனர். இருகைக் கூப்பி எல்லோருக்கும் வீரவணக்கம் செலுத்தி, "ஒரு தாஸ் போனால் ஒன்பது தாஸ்கள் பிறப்பார்கள்" என்றும், "உழைக்கும் மக்களே ஒன்று சேருங்கள். இன்குலாப் ஜிந்தா பாத்" என்றும் கோஷம் போட்டுக் கொண்டே நாகர்கோவில் நெட்டாபஸ்ஸில் ஏறினார். நாகர்கோவில் பாளையங்கோட்டை மத்தியச்சிறை, திருச்சி மத்தியச் சிறை ஆகிய சிறைகளில் அடைக்கப்பட்டு சித்திரவதைகளும் செய்யப்பட்டு 7 வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டார். சிறையிலிருந்து கொண்டும் கைதிகளின் உரிமைகளுக்காக பல போராட்டங்களும், உண்ணாவிரதங்களும் நடத்தி பல உரிமைகளும் கிடைக்கப்பெற்றன. மேலும், திருச்சி மத்தியச்சிறையிலிருந்து கலியபெருமாள் அவர் மகன் உட்பட்ட பலர் தூக்கு தண்டனை விதிக்கப் பட்டதை ஆயுள் தண்டனையாக மாற்ற கோரி கிருஷ்ணப்பிள்ளை இன்னும் சில பேர் உட்பட என் கணவர் முன் நின்று கடும் போராட்டம் நடத்தி கைகால் ஒடிக்கப்பட்டு மண்டையை உடைத்து கண்களில் மிளகாய் பொடி தூவி ஏழு நாட்கள் ஞாபக சக்தியிழந்து திருச்சி பெரிய ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். பிறகு தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. எனது கணவருக்கு ஏழு வருடதண்டனை முடியும் முன் குலுக்கல் முறையில் விடுதலையும் செய்யப்பட்டார்கள். பிறகு கலிய பெருமாள் மனைவி வாலாம்பாள் என்பவர் எனக்கு ஒரு கடிதமும் ரூ. 50/- பணமும் அனுப்பினார்கள்.

எனது கணவர் தண்டனை காலம் முடித்து வெளியே வாசலில் வந்ததும், மிசா சட்டம் என்று திரும்பவும் கைது செய்து சிறையில் வைத்தார்கள். எனது கணவர் சிறையிலிருக்கும் போது பல கடிதங்கள் எழுதினார். நாட்டில் ஏழை எளிய உழைக்கும் மக்களின் துயரங்கள் பற்றியதாகத் தான் இருக்கும். நான் அவருக்கு கடிதம் எழுதும் போது "பிள்ளைகளுக்கு நோய்" என்று எழுதினால் "சாவைத் தடுக்க யாராலும் இயலாது. பிள்ளைகளுக்கு மருந்து வாங்கி கொடு" என்றும், "வீட்டுச்சிலவுகளுக்கு கஷ்டமாக உள்ளது" என்று எழுதினால் "நம்மை விட கோடிக்கணக்கான மக்கள் தங்க வீடில்லாமலும் உடுக்க உடையில்லாமலும், உண்ண உணவில்லாமலும், வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும், கஷ்டப்படுகிறார்கள். அதை நினைத்துப் பார்க்க வேண்டும் அப்போது நமக்கு இது கஷ்டமல்ல" என்று கடிதம் எழுதுவார். எல்லா கடிதத்திலும் உழைக்கும் ஏழை, எளிய விவசாய தொழிலாளர்கள் சுரண்டப்படுவதையும், துயரப்படுவதையும் கண்டிக்கும் வகையில் எழுதுவார். மாறப்பாடியில் தங்கையன் என்பவர் இந்தக் கடிதங்களைப் படிக்க ஆர்வத்துடன் வந்து எல்லா கடிதங்களையும் படிப்பார்.

www.tamilarangam.net

எனது கணவர் ஏழு வருட தண்டனை முடிந்து வெளியே வாசலில் வந்ததும், மிசா சட்டம் என்று திரும்பவும் கைது செய்யப்பட்டார். அதுவும் முடிந்து விடுதலையாகி வந்த பிறகும் முன்னெச்சரிக்கை என்று பல தடவை ஜெயிலுக்கு சென்றதுண்டு. என்னையும் பிள்ளைகளையும் ஒன்றாக உட்கார வைத்து, பிள்ளைகளே, எனக்கு வேலை செய்ய முடியாது. நீங்கள் சாப்பிடும் உணவில் எனக்கும் ஒரு பங்கு தர வேண்டும் என்று சொன்னார்.

தோழர் தாஸ் தமது திருமணம் போல் பிள்ளைகளுக்கும் திருமணம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார். அதன்படியே, வரதட்சினை கேட்காமலே திருமணம் நடத்தினோம்.

அவர் வாழ்நாள் முழுவதும் தொழிலாளர் விவசாய ஏழை எளிய பொது ஜனங்கள் மத்தியில் நாட்டு நலனுக்காக அயராது பாடுபட்டார். 1996-ம் வருடம் நவம்பர் 6-ம் நாள் நெஞ்சு வலி காரணமாக திடீர் மரணமடைந்தார்.

இப்படிக்கு
லைசம்மாள்
கோதையார்

## தன்னலமற்ற தோழர்

1980-ஆம் ஆண்டு மதுரையில் நடந்த ஒரு கூட்ட நிகழ்ச்சியில் முதன்முதலாக தோழர் தாஸ் அவர்களை சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. காட்சிக்கு மிக எளியவராக காணப்பட்ட அவர் கூட்டத்தில் எடுத்துரைத்த கருத்துக்கள் வேகமாகவும், ஆழமாகவும், மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தின் தொகுப்பாகவும் அமைந்திருந்தது.

நான் சென்னையிலிருந்து வந்திருக்கிறேன் என்பதை அறிந்ததும் "தோழர் ஏ.எம். கோதண்டராமனை உங்களுக்கு தெரியுமா?" என்று கேட்டார். அந்த காலத்தில் தோழர் ஏ.எம்.கே, சென்னையில் இருந்தால் பெரும்பாலும் தொழிற்சங்க தலைவர் ஆர். குசேலர் அலுவலகத்தில் தான் தங்குவார். அப்பொழுது வேறொரு தோழர் மூலம் அவரிடம் எனக்கு தொடர்பு ஏற்பட்டது. "சந்தித்து இருக்கிறேன்" என்றேன். "அவரை நான் நேரில் சந்தித்து பேச வேண்டும். அதற்கு உங்களால் உதவ முடியுமா?" என்றார். எதற்கு என்று நான் கேட்டதும், தான் தோட்டத் தொழிலாளியாக இயக்கத்தில் இணைந்து போராடியதில், சி.பி.எம். கட்சியினால் காட்டிக் கொடுக்கப்பட்டு

www.tamilarangam.net

கைதானதையும், தானும் தோழர் ஏ.எம்.கே-யும் ஒன்றாக சிறையில் இருந்ததையும், சில தத்துவ விளக்கங்கள் குறித்து தற்போது அவரிடம் விவாதிக்க வேண்டும், எனச் சுருக்கமாக கூறினார். முதலில் கூட்டத்தில் அவர் கருத்துக்களைக் கேட்டதும் ஏற்பட்ட மதிப்பு, அவரின் போராட்ட வரலாற்றைக் கேட்டதும் என் மனதில் பன்மடங்கு கூடியது. அன்று எங்களுக்குள் ஏற்பட்ட தோழமை தொடர்ந்தது.

அவர் பள்ளியில் அதிகம் படித்ததில்லை! ஆனால் மார்க்சிய ஆசான்களின் நூல்களை கற்றவர். விவாதத்தில் கலந்து கொண்டு பேசும்போது மார்க்சிய ஆசான்களின்_நூல்களில்_மேற்கோள்காட்டி, இந்த நூலில், இந்த பக்கத்தில் இது சொல்லப்பட்டிருக்கிறது என்று விளக்கம் அளிக்கும் அளவுக்கு மார்க்சிய நூல்களை கற்றுத் தேர்ந்தவர்.

தொழிலாளர் ஒற்றுமை இயக்கம் தொடங்கி அவர் அதன் மாநில அமைப்பாளராக ஆனதும் தமிழ்நாடு அச்சகத்தொழிலாளர் சங்கத்தோடு நெருங்கிய பிணைப்பினை ஏற்படுத்திக் கொண்டவர்.

எங்களது தமிழ்நாடு அச்சகத் தொழிலாளர் சங்கத்திற்கு அவர் பக்க பலமாக இருந்து பலவழிகளில் உதவியதை நாங்கள் நெஞ்சம் திறந்து நினைவு கூறுகிறோம்.

தொழிலாளியாக வாழ்க்கையை தொடங்கி, தொழிலாளிக்காக போராடி தொழிலாளி வர்க்கத்திற்காக இயக்கத்தைக் கண்ட தன்னலமற்ற அந்த உண்மைத் தோழருக்கு எங்களது சங்கத்தின் சார்பாக வீர வணக்கத்தை செலுத்துகிறோம்.

இப்படிக்கு<br>
கா. ந. வாசுதேவன்<br>
பொதுச் செயலாளர்<br>
தமிழ்நாடு அச்சகத் தொழிலாளர் சங்கம்<br>
சென்னை

## சோதனைகளை வெற்றி கொண்டவர்

அது 1968-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம். ஒரு கல்லூரி மாணவனும் திரு. நாராயணனும் என்னிடம் வந்தனர். ஒரு கூட்டம் நடத்த என் அறையைப் பயன்படுத்திக் கொள்ளலாமா என்று கேட்டனர். நாகர் கோவிலின்

www.tamilarangam.net

பணக்காரப் பகுதியொன்றில் வாடகைக்கு எடுத்த ஒரு அறையில் நான் இருந்தேன். என்னுடன் இன்னுமிரண்டு கல்லூரி மணவர்கள் தங்கியிருந்தனர். அந்த குறிப்பிட்ட நாளில் மாலை 7 மணியளவில் தோழர் எஸ்.கே. சாமி, நாராயணன், பி. தாஸ், ராஜசேகரன் மற்றும் இருவர் என் அறைக்கு வந்தனர். வீட்டுக்குச் சொந்தக்காரர் கீழ்தளத்தில் குடியிருந்தார். எனவே நாங்கள் மெழுகுவர்த்தியின் ஒளியில், நக்ஸல்பாரி வழியில் கட்சிளைக் கட்டுவது குறித்து விவாதித்தோம்.

நன்றாயிருந்த கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட கட்சி (சி.பி.ஐ.), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.எம்.) என இரண்டாகப் பிளவுபட்ட போது தோழர் ஈ.எம்.எஸ். எந்தக் கட்சியில் சேருவது என்று யோசித்துக் கொண்டிருந்தார். அப்போது தோழர் லூயிஸ் தேவசகாயம் கன்னியாகுமரி மாவட்ட தோட்டத் தொழிலாளர்களை 'கன்னியாகுமரி மாவட்ட தோட்டத் தொழிலாளர் சங்கத்தின்' (K.K.D.P.W.U.) கீழ் திரட்டினார். அச்சங்கத்தில் தோழர் தாஸும் பொறுப்பு வகித்தார். கே.கே. மாவட்டத் தோட்டத் தொழிலாளர்களின் கூட்டங்கள் பலவாராக நடத்தப்பட்டன. அவற்றில் பங்கேற்க அழைக்கப்பட்டிருந்த தோழர் ஈ.எம்.எஸ்., தொழிலாளர்களின் புரட்சிகர உயர்வின் தீவிரம் கண்டு சி.பி.எம்.-ல் சேருவதென முடிவு செய்தார். அவருடைய நீண்ட காலத் தோழர்கள்-பூர்ஷ்வா பரம்பரையில் வந்த அச்சுதமேனன் போன்றவர்கள்-குருஷ்சேவிச திருத்தல்வாத சி.பி.ஐ. கட்சியில் சேர்ந்தனர். எனினும் ஈ.எம்.எஸ். இந்த முடிவு செய்தார்.

தோட்டத் தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் பிற பிரிவு மக்களிடையே நாங்கள் ஓய்வின்றி உழைத்தோம். 1956-இல் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டு தமிழ்நாட்டின் அங்கமாக ஆவதற்கு முன்பு, கன்னியாகுமரி மாவட்டம் திருவிதாங்கூரின் பகுதியாகவே இருந்தது. எனவே கன்னியாகுமரி மாவட்டம் கேரள மாநிலத்தின் வரலாற்று-பண்பாட்டு-புவியியல் பாரம்பரியம் கொண்டிருக்கிறது. எங்கள் பணியைப் பொறுத்தவரை கேரளம் மற்றும் தமிழகத்தின் சி.பி.ஐ. (எம்.எல்) கட்சியுடன் தொடர்பை நாங்கள் நிறுவியிருந்தோம். கட்சிப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள 1969-இல் தோழர் தாஸ் ரப்பர் தோட்டப் பணியை விட வேண்டியதாயிற்று. பணியிலிருந்து விலகியதால் அவருக்குக் கிடைத்த பி.எப். தொகை ரூ. 700/-. தன் குடும்பம் வறுமையில் வாடியபோதும் அத்தொகையை அப்படியே கட்சிக்குக் கொடுத்துவிட்டார் அவர். ஆனால் அந்தப் பணத்தில் ஒரு பகுதியை 'தோழர்கள்' விழுங்கிவிட்டனர். இந்த நேரத்தில்தான் நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த அவருடைய மகன் நோய்வாய்ப்பட்டு இறந்தான். ஏற்கனவே கஷ்டச் சூழலில் இருந்த குடும்பத்துக்கு இது

www.tamilarangam.net

பெரும் அதிர்ச்சியளித்தது. அவருடைய நெருங்கிய தோழர்களோ உதவக் கூடிய நிலையில் இல்லை. ஆனால் தோழர் தாஸ் இந்த சோதனைகளை உறுதியுடன் எதிர்கொண்டார் என்றால் அதற்குக் காரணம் மார்க்சிய-லெனினியத்தின்பால் கொண்ட அர்ப்பணிப்புதான். அவருடைய மனைவி தோழர் லைசம்மாள் அவருக்கு துணை நின்று கட்சிப் பணியைத் தொடர ஊக்கமளித்தார். தோட்டத்தில் தற்காலிகப் பணியாளராக இருந்த லைசம்மாள் தன் வருமானத்தால் குடும்பத்தை நடத்தினார் அவ்வப்போது வீட்டுக்கு வரும் தோழர்களுக்கும் உணவு படைத்தார்—இருந்ததைப் பகிர்ந்து கொடுப்பார்.

பணியில் முன்னேறிக் கொண்டிருந்தோம். சி.பி.எம்.—ன் கடும் எதிர்ப்பு, காவல் துறையின் துணையுடன் எங்கள் பணியை முடக்க முயன்றது ஆகியவற்றால் தொழிலாளரை அணிதிரட்டுவதில் நாங்கள் எச்சரிக்கையாக இருந்தோம். 1967-இல் கேரள முதலமைச்சரான ஈ.எம்.எஸ். கம்யூனிஸ்ட் எதிர்ப்பு அடக்குமுறையை தலச்சேரியிலிருந்து தூக்கினார். புல்பள்ளி தோழர்களும், ஒரு காலத்தில் அவருடைய அரசியல் குருவாகவும் இருந்த தோழர் லூயிஸ் தான் ஈ.எம்.எஸ்.ஸை சி.பி.எம்.—ல் சேர்த்தவர்கள்.

கேரளத்தில் நடைபெற்ற ஒரு அழிப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டத் தோழர்கள் தலைமறைவாகவேண்டியிருந்தது. தோழர்கள் தாஸ், நாராயணன், கிருஷ்ணப்பிள்ளை மற்றும் பலர் தலைமறைவாயினர். ராஜன் (என்கிற ராஜசேகர்) என்பவரைத் 'தலைவராகக்' கொண்டு பிரிந்து சென்ற ஒரு குழு, மாவட்டக் குழுவுக்குத் தெரியாமல் ஒரு சாகசச் செயலை மேற்கொண்டது. நாகர்கோவில் அருகே நடந்த இந்த அழிப்பு நடவடிக்கையில் அவர்களில் பலர் கைதாகினர். கடும் துன்புறுத்தலுக்கு ஆளான அவர்கள், இந்த நடவடிக்கை பற்றி எதுவுமே தெரியாத சிலரின் பெயர்களையும் உளறிவிட்டனர். இந்த நேரத்தில் தான் காட்டுப்பகுதியில் ஒரு நாட்டு வெடிகுண்டு வெடித்தது. இரண்டு தோழர்கள் காயமடைந்தனர். இந்த வழக்கில் தோழர்கள் லூயிஸ், தாஸ், கிருஷ்ணப்பிள்ளை மற்றும் சிலர் குற்றம் சாட்டப்பட்டனர்.

1970 நவம்பர் 14 அன்று ஒரு அழிப்புப்பணி கேரளத்தில் நடைபெற்றது. சில தோழர்கள் இங்கே கொண்டுவரப்பட்டு புகலிடம் தரப்பட்டனர். 1971 மே மாதத்திற்குள் பெரும்பாலான முக்கியத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். சிறையில் அடைபட்டு சித்திரவதைக்கு ஆளாயினர். 'கம்யூனிஸ்ட்' முதலமைச்சர் அச்சுதமேனன் வழிகாட்டலின் படி கேரளத்திலும், கருணாநிதி முதலமைச்சராக இருந்த தமிழகத்திலும் 'போலீஸ் ராஜ்யம்' அவிழ்த்து விடப்பட்டது. மத்தியில் திருமதி இந்திராகாந்தி அறிவிக்கப்படாத அவசரச்சட்டத்தைப் பின்பற்றினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரட்சிகளை ஒடுக்க இலங்கைக்கும் கிழக்கு பாகிஸ்தானுக்கும் ராணுவத்தை அனுப்பினார். இந்திய அரசின் நோக்கம் முஜிபுர் ரஉற்மானுக்கோ, இலங்கை அரசுக்கோ உதவுவதல்ல தோழர் முகம்மது ஜோஉறா தலைமையில் கிழக்கு பாகிஸ்தானிலும், தோழர் திலக் தலைமையில் இலங்கையிலும் துவங்கிய புரட்சி இயக்கத்தை ஒடுக்குவதே ஆகும். போலி கம்யூனிஸ்டுகளின் துணையுடன் இந்திரா காந்தி இதில் வெற்றியும் பெற்றார்.

லூயிஸ், தாஸ் உள்ளிட்ட மற்ற தோழர்களுக்கு ஏழாண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. திருச்சி சிறையின் நிலைமை மிக மோசமாக இருந்தது. தோழர்கள் இதை எதிர்த்து உண்ணாவிரதம் மேற்கொண்டனர். ஆனால் சிறை அதிகாரிகள் அடக்குமுறையைக் கட்டவிழ்த்தனர். தோழர் தாஸின் கால் எலும்பு முறிந்தது.

1976–இல் விடுதலையான தோழர்கள் 'மிசா'வின் கீழ் மீண்டும் கைதாயினர். இந்திரா காந்தியின் கொடுங்கோலாட்சி 1977-இல் முடிந்தது. மத்தியில் ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தது. நெருக்கடி நிலைப் பிரகடணத்தின் போது கைதானவர்கள் அனைவரும் விடுதலையாயினர்.

மார்க்சிஸ்ட்–லெனினிய இயக்கம் குழம்பிக் கிடந்தது. புதிது புதிதாகப் பல குழுக்கள் பிறந்தன. தாமே உண்மையான எம்.எல். என்றும் தனது வழியே சரியான எம்.எல். வழி என்றும் ஒவ்வொரு குழுவும் கூறிக் கொண்டது.

கன்னியாகுமரி மாவட்டத் தோழர்கள் எனது நாகர்கோவில் இல்லத்தில் ஒரு கூட்டம் நடத்தினர். தோழர் லூயிஸ் தலைமையில், நிலவரம் குறித்து அலசப்பட்டது. தேசிய மற்றும் சர்வதேச நிலவரங்களில் நாங்கள் தனித்தன்மையோடு இருந்தோம். நமது கருத்துக்களைப் பரப்புவதற்காக தோழர் எஸ்.கே.யை ஆசிரியராகக் கொண்டு 'புதிய பார்வை' என்ற மாத இதழை தமிழில் துவக்கினோம்.

ஒரு மாதாந்திரக் கூட்டத்தின் போது சி.பி.சி.(எம்.எல்.) உடன் தொடர்பு கொள்ளுமாறு தோழர் லூயிஸ் என்னிடம் கூறினார். சி.பி.சி.(எம்.எல்.)–இன் பதில் மிகவும் உற்சாகம் தருவதாக இருந்தது. அதன் விளைவே–டிசம்பர் 1980–இல் உருவான இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சி.

இப்படிக்கு
என். தங்கப்பன்
புத்தன் சந்தை

www.tamilarangam.net

## புரட்சிகர ஐக்கிய முன்னணிக்கு வழிகாட்டி

கட்சி அணிகளிடம் மட்டுமின்றி, உழைக்கும் மக்கள் மத்தியிலும், தோழர் தாஸ் என அன்பாக அழைக்கப்படும் மரியாதைக்குரிய அன்புத்தோழர் தாஸ் அவர்களின் வரலாறு ஒரு தனிநபரின் வாழ்க்கை வரலாறு அல்ல. புரட்சிகரமான கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சந்திக்கவேண்டிவந்த போலீஸ் அடக்குமுறை, துன்பதுயரங்கள், சிறைவாழ்க்கை, சிறைக்குள்ளேயும் உரிமைப் போராட்டங்கள் ஆகிய தியாகத்தின் வரலாற்றை உட்படுத்தியது தான் மார்க்சிச–லெனினிச இயக்கம். ஒரு சாமானியத் தொழிலாளியை உழைக்கும் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்திற்குத் தலைவனாக எப்படி உருவாக்க முடியும் என்பதை எடுத்துக் காட்டும் வரலாறு தான் அவரது வாழ்க்கை என்பதில் ஐயமேயில்லை.

இன்றைய சமூக அமைப்பில் அடக்கி, ஒடுக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலிருந்து, அனுபவமும், முதிர்ச்சியுமுடையதொரு போராளியை, கொள்கைப்பிடிப்புடன் உறுதியுடன் பேசுகின்ற பேச்சாளரை, தொழிலாளிவர்க்கத்தின் அரசியல் தலைவராக வளர்த்தெடுப்பதில் சிறப்பான கவனத்தை இந்தியகம்யூனிஸ்ட் கெதா் கட்சி செலுத்திவந்துள்ளது என்பதற்கு அவரது வாழ்க்கை எடுத்துக்காட்டாகவுள்ளது.

தோழர் தாஸ் அவர்களின் வாழ்க்கை வரலாறு உழைக்கும் மக்களிடையே புரட்சிகரமானதொரு ஐக்கிய முன்னணியைக் (அரசியல் ஒற்றுமையை) கட்டும் பணியில் ஈடுபட்டுள்ள இன்றைய இளையதலைமுறையினருக்கும், எதிர்கால அரசியல் போராளிகளுக்கும் வழி காட்டியாக விளங்கும் என்பது உறுதி.

தோழமையுள்ள
ஈ. சரவணமுத்துவேல்
தொழிலாளர் ஒற்றுமை இயக்கம்
தமிழ்நாடு

## சிறந்த கம்யூனிஸ்ட் அமைப்பாளர்

வாழ்நாள் முழுவதும் கம்யூனிஸ்டாக வாழ்ந்தவர் தோழர் தாஸ். கன்னியாகுமரி மாவட்டத்திலும் தமிழகத்தின் இதர பகுதிகளிலும் கட்சியின் வளர்ச்சியில் அவருக்கு ஒரு பெரும் பங்கு உண்டு. கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட பலவீனங்களையும் பிளவுகளையும் நன்றாக உணர்ந்து, ஒரு புதிய முறையிலான இன்றைய காலகட்டத்தில்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிலாளி வர்க்கத்திற்கு தலைமை தாங்கக் கூடிய ஒரு கட்சியை கட்டியமைப்பதற்காக அயராது உழைத்தவர்.

அவருடைய சிறப்பான குணங்களில் ஒரு சிலவற்றை இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். வயதில் முதிர்ச்சியடைந்தாலும், மனதில் அவர் இளைஞனைப் போன்ற தெம்பு கொண்டிருந்தார். அவரைச் சுற்றி எப்போதுமே ஒரு இளைஞர் பட்டாளம் இருக்கும். சுரண்டல் ஒடுக்குமுறையற்ற ஒரு இந்தியாவை உருவாக்குவதில் இளைய தலைமுறையினரின் பங்கு எவ்வளவு முக்கியமானது என்பதை அவர் மிகத் தெளிவாக உணர்ந்திருந்தார். இளைஞர்களை கவர்ந்திழுக்கும் முறையில் அவர் அரசியலையும் கட்சி வேலைகளையும் பற்றி பேசுவார். அவரை தங்களுடைய நண்பனாக, தயக்கமின்றி அணுகக்கூடிய பாட்டாளித் தலைவராக, இளைஞர்கள் கருதக்கூடிய முறையில் அவர் செயல்பட்டார்.

அவருடைய மற்றுமொரு சிறப்புக் குணம் அவருடைய அபார ஞாபக சக்தி. நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கும், இளைஞர்களுக்கும் அவரை எப்படி அறிந்திருந்தார்களோ, அதே போல அவரும் அவர்களை அறிந்திருந்தார். ஒவ்வொருவருடைய பெயரும், அவர்கள் வசித்துவந்த இடமும், அவர்களுடைய விரல் நுனியில் இருந்தன. தொழிலாளர் குடும்பங்களில் அவருக்கிருந்த வரவேற்பிற்கு வேறு சிறந்த காரணம் வேண்டுமா?

அவருக்கிருந்த அறிவு தாகம் எல்லையற்றது. வாழ்நாளில் பாதியை கழித்துவிட்டப்பிறகு தான் அவர் சரியாக எழுதப் படிக்கவே கற்றுக் கொண்டார். ஆனால், அவருக்கிருந்த படிப்பினையை அறிந்தவர்களுக்கு அது ஒரு நம்ப முடியாக விஷயமாக இருந்தது. கம்யூனிஸ்ட் இலக்கியங்களை ஆழப் படித்து கட்சித் தோழர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் அவற்றின் சாராம்சத்தை எளிய மொழியில் விளக்குவதில் அவர் நிகரற்றவர். அதே போல கட்சிப் பத்திரிக்கையிலும் தினசரிகளிலிருந்தும் விஷயங்களை கம்யூனிஸ்ட் கண்ணோட்டத்துடன் கிரகித்துக் கொண்டு அதை ஜனரஞ்சகமான முறையில் பொதுக் கூட்டங்களில் பேசுவதில் அவர் கைதேர்ந்தவர். ஒரு சிறந்த அமைப்பாளராகவும், கொள்கை விளக்கப் பேச்சாளராகவும் செயல்படுவதற்கு இவையெல்லாம் இன்றியமையாக குணங்கள்.

இப்படிப்பட்ட ஒரு சிறந்த கம்யூனிஸ்ட் அமைப்பாளர் மறைந்தது, இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சிக்கு மட்டுமல்ல, இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம் முழுவதற்குமே மாபெரும் பேரிழப்பாகும்.

தோழர் மோகன்
சென்னை

www.tamilarangam.net

## மார்க்சியவாதிகளின் இழப்பு

தோழர் வில்சன் அவர்களுக்கு,

தங்களின் கடிதம் காலதாமதமாக கிடைத்ததால் உடனே பதில் எழுத இயலவில்லை. தோழர் தாஸ் அவர்களின் இழப்பு நம் எல்லோருக்கும் குறிப்பாக மார்க்சிய சிந்தனைக் கூடத்திற்கு பெரிய இழப்பாக கருதி மிகுந்த வருத்தத்துடன் இக்கடிதத்தை எழுதுகிறேன். தொடர்ந்து மார்க்சிய கூடத்திற்கு மார்க்சியவாதிகளின் இழப்பாகவே மாறிவிட்டது. தோழர் தாஸ் அவர்களின் குடும்பத்திற்கும் தோழர்களுக்கும் மார்க்சிய சிந்தனைக் கூடத்தின் ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மற்ற விஷயங்கள் தங்கள் பதில் கண்டபின்,

இப்படிக்கு
ஜி. ஏகாம்பரம்
சென்னை

## பாக்கியம் கிடைக்கவில்லை

அன்புக்கும், பாசத்துக்கும், மரியாதைக்கும் உரிய எனது தலைவரும் தோழருமான பி. தாஸ் அவருடைய 6.11.96-ல் இறப்பு என்னை மிகவும் வருத்தத்திற்கு ஆளாக்கியுள்ளது. ஆபீசிலிருந்து 9.11.96-ல் எழுதிய கடிதம் 15.11.96-ல் சுமார் இரவு 7 மணியளவில் டீக் கடையில் இருந்து கிடைத்தது. 19.11.96-ல் நமது பீப்பள்ஸ் வாய்ஸ் கிடைத்தது. 21.11.96 அன்று கோதையார் தோழர் தாஸ் அவர்களுடைய வீட்டிற்கு சென்றிருந்தேன். தோழர் தாஸை நல்லடக்கம் செய்த இடத்திற்கு சென்று அவருக்கு என்னுடைய மௌன அஞ்சலி செலுத்திய பின் அவர்களுடைய வீட்டிற்குச் சென்று எல்லா விவரத்தையும் விசாரித்துள்ளேன். என்னுடைய அருமைத் தோழர் தாஸ் அவர்களுடைய மனைவி அவர்கள் எல்லா விபரத்தையும் சொன்னார்கள்.

மேலும் அன்று பிடித்துள்ள புகைப்படத்தையும் என்னிடம் காட்டியுள்ளார்கள். மற்ற தோழர்களுக்கெல்லாம் அவருடைய உடலை நேரடியாக பார்ப்பதற்கு கிடைத்த பாக்கியம் எனக்கு கிடைக்கவில்லை என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இரங்கல் கூட்டத்தினுடைய தேதியைப் பின்னால் தெரிவிக்கப்படும் எனப் பத்திரிக்கையில் பார்த்துள்ளேன்.

www.tamilarangam.net

தேதி குறிப்பிட்டால் உடனே தெரிவிக்கவும்.

இப்படிக்கு உங்கள்
யாவருடையவும் அன்பு மறவாத
கே.பி. ஆபூபக்கர்
கன்னியாகுமரி மாவட்டம்

## புறமுதுகு காணாத போர் மறவர்

தோழர்,

பேரதிர்ச்சிக்குள்ளாக்கிய தோழர் தாஸ் அவர்களின் மரணம் பற்றிய செய்தி என்னால் நம்பவே முடியாத செய்தியாகவும், மிகவும் மன வருத்தமாகவும் இருக்கிறது. கெதர் கட்சித் தோழர்களுக்கும், என்னுடைய ஆழ்ந்த மன வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

### புன்னகையானவரே!

தோழரே! ஏமாற்றப் பெறும்
உழைக்கும் மக்களுக்காக
எண்ணற்ற மேடு பள்ளங்களை
ஏறி வந்தவரே!

வெந்ததை தின்று
விதி வந்தால் வீழ்வோம் என்ற
நிலை மாற்றிய வென் முடி வேந்தரே!

புற முதுகு காணாத
போர் மறவரே!
மாறுபட்ட கருத்தான போதும்
மாறாத புன்னகையானவரே!

உமக்கு
என் வீரவணக்கம்!

இப்படிக்கு
க. சீவானந்தம்
புரட்சிகர இளைஞர் முன்னணி
சென்னை

www.tamilarangam.net

# சிருஷ்டியின் நஷ்டம்

தோழர் லைசம்மாவுக்கும் மற்ற தோழர்களுக்கும்,

கடிதத்திலிருந்து கொஞ்சம் தாமதமாகியும் தோழர் தாஸ் அவர்களின் இறப்பு செய்தி அறிந்தேன். அந்த செய்தியை என்னால் நம்ப முடியவில்லை. கழிந்த மாதம் அவரை சந்தித்தபோது அவர் ஊக்கத்துடனும் செயல்திறனுள்ளவருமாக இருந்தார். தோழருமாக செலவழித்த ஒரு சில பகல் இரவுகளில் கூட மனம்திறந்த பேச்சுகள், அரசியல் விளக்கங்கள், விமர்சனங்கள், சிறுசும் பெரிசுமாக பல பயணங்கள் என்றவையால் திரும்பவும் ஞாபகம் வரும்போது தோழர் தாஸ் அவர்களின் மறைவு சிருஷ்டியின் நஷ்டமென, ஆழமாய் நான் புரிந்துக்கொண்டேன்.

அருமனை பகுதியிலுள்ள தோட்டத் தொழிலாளிகளுடைய வாழ்க்கையுமாக வேருன்றி டெல்லி மற்றும் பம்பாயிலுள்ள தொழிலாளர்களின் நெஞ்சத்திலும் படர்ந்து பரவிய அந்த மனிதாபிமானியின் மறைவு வருத்தத்திற்குரியதாகும். கழிந்த தடவை நான் ஊருக்கு வந்திருந்தபோது ஒரு நீண்ட இடைவேளைக்கு பிறகு எதிர்பாராத அளவில் தோழர் தாஸ் அவர்கள் என்னை பார்த்து வந்தார். குறிப்பிட்ட அந்த உறவின் சூடு ஒரு தடவை கூட பகர்ந்து தந்துவிட்டு போகும்போது தாமதிக்காமல் திருச்சியில் வரலாம் என்றும் அங்கு வைத்து சந்திக்கலாம் என்றும் தோழர் தாஸ் அவர்கள் சொல்லியிருந்தார்.

அந்த உறவும் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கும்போதுதான் தோழரின் மறைவுச் செய்தி கடிதம் கிடைத்தது. ஆம், தோழர் இனி ஒரு நாளும் என்னை பார்க்க வரமாட்டார். பாட்டாளி வர்க்க போராட்டத்தின் தலைமையில் அந்த மாபெரும் தலைவர் இருக்கமாட்டார். அதை நினைக்கும்போது நெஞ்சில் தாங்க முடியாத வருத்தம்.

இருந்தாலும் நாம் எல்லாம் பாக்கியவான்கள். பாட்டாளி வர்க்கத்திற்காக வாழ்க்கை முழுவதும் அர்ப்பணித்த அந்த மாமனிதனுமாக வாழ்ந்து இருப்பதற்கும், அவருமாக செயல்படுவதற்கும் எங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளை நினைத்து நான் தன்னிறைவு கொள்கிறேன். தோழரின் தனிப்பட்ட வாழ்க்கையில் பெருமை அடைந்து காணிக்கை செலுத்திய தோழர் லைசம்மாவுக்கும் பெருமை அடைவதேயாகும்.

தோழர்களே,

தோழர் தாஸ் அவர்களின் பவுதீக உடல் மட்டும்தான் நம்மை விட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரிந்தது. வாழ்க்கை நாள் முழுவதும் அவர் உயர்த்தி காட்டிய தத்துவார்த்த போராட்டத்தின் வாயிலாக அவர் பாட்டாளி வர்க்கத்திற்கு பகிர்ந்து தந்த உயிரும், உணர்வும், வழிகாட்டியும் எல்லாம் ஒரு நாளும் மறையாது. அவை நம்மோடு இருக்கும் காலம் வரை தோழர் தாஸ் அவர்களின் நினைவும் நம்மமைவிட்டு மறையாது. அவருக்கு மறைவும் கிடையாது.

அந்த மாமனிதனின் நினைவின் முன்பாக என் செவ்வணக்கங்கள்!

தோழரின் மறைவால் வருந்தக்கூடிய தோழர் லைசம்மாவுக்கும் குடும்பத்திற்கும், எண்ணற்ற தோழர்களுக்கும் அந்த பிரிவை தாங்குவதற்கும் தோழர் காட்டிய பாதையால் முன்னேறுவதற்குள்ள திறன் உருவாகட்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.

ஆழ்ந்த வருத்தத்தில் பங்கேற்க,

ராஜேந்திர குமார்
திருச்சி

## நெஞ்சுள்ளவரை நினைவிருக்கும்

தமிழினியீர்!

வணக்கம்.

இதழ் வந்தது. இதழ் கொண்டு வந்தச் செய்தியால் இதயம் வெந்தது. இந்தியப் பொதுவுடைமை கெதர் கட்சியின் மத்தியக்குழு உறுப்பினர் தோழர் தாஸ் அவர்கள் 6.11.96-ம் நாள் இயற்கை எய்தியச் செய்தி துயர்ச் செய்தியாய், இதயத்தைக் கவ்வியது. கடைமக்களைக் கரையேற்ற தன் வாழ்க்கையை ஒப்படைத்த மாமனிதரின் மறைவு, ஈடு செய்ய முடியாத இழப்பு ஆகும்.

ஆழமான கொள்கையும் அதில் அசைக்க முடியாத நம்பிக்கையும் கொண்ட பொதுவுடைமைச்சீயம் மறைந்து விட்டதால் பாட்டாளி வர்க்கம் தத்தளிக்கிறது.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவே உயர்ந்து நின்ற குன்றம் புதைந்து விட்டதால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏழையர் நெஞ்சம் துடிக்கின்றது.

'நெருநல் உளனொருவன் இன்றில்லை' என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு

என்ற வள்ளுவன் வாக்கிற்கு, தோழர் தாஸ், பெருமை சேர்த்தார்.

"நெஞ்சுள்ளவரை அவர் நினைவிருக்கும்–இந்த
நிலம் உள்ளவரை அவர் புகழ் இருக்கும்".

அன்புள்ள
கவிஞர் சிங்காரவேலன்
திருச்சி

## போராட்டக் கனல் மூட்ட சபதமேற்போம்

தோழர் அவர்களுக்கு,

தோழர் தாஸ் அவர்களுடைய மறைவுச் செய்தி அதிர்ச்சியூட்டியது. தோழர் தாஸ் அவர்களுடைய மறைவு அவரது குடும்பத்தாருக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சிக்கும் மட்டுமல்ல ஒட்டுமொத்த கம்யூனிஸ்ட் இயக்கத்துக்குமே ஏற்பட்டுள்ள பேரிழப்பாகும்.

தோழர் தாஸ் அவர்களை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சி மற்றுமதன் வெகு ஜன இயக்க தோழர்களுக்கும் மதுரை தோழர்களின் சார்பில் எமது ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

'ஒரு போராளிக்கு செலுத்துகிற உண்மையான அஞ்சலி போராட்டமன்றி வேறில்லை' என்பதற்கேற்ப தோழர் தாஸ் அவர்களது புரட்சிக் கனவுகளை பூர்த்தி செய்ய போராட்டக் கனல் மூட்ட இத்தருணத்தில் சபதமேற்போம்.

தோழர் தாஸ் அவர்களின் நினைவு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்க ஆவலாக உள்ளேன். தகவல் தெரிவிக்கவும். வாய்ப்பிருந்தால் கண்டிப்பாக கலந்து கொள்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோழர் தாஸ் அவர்களுக்கு வீர வணக்கம்!

புரட்சி நீடுழி வாழ்க!!

நன்றி,

தோழமையுடன்
நா. சண்முகநாதன்
'அதிர்வு'–ஏகாதிபத்திய எதிர்ப்பு மாத இதழ்
மதுரை

## மார்க்சிய ஆய்வை மேற்கொள்வதே நமது குறிக்கோள்

தோழர் அவர்கட்கு, வணக்கம். தங்கள் கடிதம் கிடைக்கப்பெற்றேன். தோழர் தாஸ் அவர்களின் நினைவு நாள் பொதுக்கூட்டம் 28.12.96 அன்று நடைபெற விருப்பதை அறிந்தேன். இந்நினைவு நாள் கூடத்திற்கு என்னால் வர இயலாமை என்பது தாங்கள் அறிந்ததே. இருப்பினும், மார்க்சிய சிந்தனைக் கூடத்தின் பொதுச் செயலரை அனுப்பி வைக்க முயற்சிக்கிறேன்.

இருந்தாலும், எனது தோழமை பூர்வமான தோழர் தாஸ் அவர்களின் நினைவு நாள் கூட்டம் அங்கு நிகழ்ந்துகொண்டு இருக்கும்போது, அன்றைய எனது நினைவுகள் அனைத்தும் தோழர் தாஸ் அவர்களைப் பற்றியதாகவே அமையும். ஏனெனில் "நான் பழகிய மார்க்சியவாதிகளில் யதார்த்தமான தோழமையுணர்வுடைய மார்க்சிய வாதியாகத் திகழ்ந்தவர் அவரே". மார்க்சியம் என்பதே யதார்த்தத்தை நெருங்கி அதன் திசைவழியை உணர்வதாகும். இந்நிலையில் தனது மார்க்சிய அறிவை முன்னெடுக்க முயற்சித்தத் தோழர்களில் தோழர் தாஸ் எனது நெருங்கிய தோழமைப் பெறுகிறார். கம்யூனிஸ்ட் கெதர் கட்சியின் முன்னோடித் தோழர் தாஸ் அவர்களின் இந்நினைவு நாள் கூட்டத்திற்கு மார்க்சிய சிந்தனைக் கூடமும், அதன் மார்க்சியத் தோழர் என்ற முறையிலும்–"இன்றைய கம்யூனிஸ்டுகள் அனைவரும்–வரலாற்று வளர்ச்சியில் மார்க்சியம்–குறித்துத் திரும்பத் தங்களது நீண்ட மார்க்சிய ஆய்வை மேற்கொள்வதே உடனடிக்கடமையாகும்". தோழர் தாஸ் அவர்களின் நினைவு நாளில் இதுவே நமது குறிக்கோளாகும் எனக் கருதுகிறேன்.

தோழமையுள்ள
வி. உலகியான்
சென்னை




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net



தொழிலாளர் ஒற்றுமை பதிப்பகம்

**Lok Awaz Publishers and Distributors**
**E-392, Sanjay Colony, Okhla Phase - II**
**New Delhi - 110 020**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்